விலை : 20.00
பக்கங்கள் : நாற்பது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 01 வெள்ளிக்கிழமை (14.04.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 116

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(சி-8107)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

## உறுதி மொழிகளை நிறைவேற்றாவிடின்

# வரிச் சலுகையை வழங்கவிடோம்!



### சர்வதேச வர்த்தகக் குழு அறிவிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை மீள பெறுவதற்கு இலங்கை அரசினால் நிறைவேற்றப்பட வேண்டிய உறுதி மொழிகள் இன்னமும் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை என்று தெரிவித்துள்ள கொழும்பு வந்துள்ள ஐரோப்பிய பாராளுமன்றத்தின் சர்வதேச வர்த்தகக் குழு, ஜீ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை உடனடியாக இலங்கைக்கு மீளவும் வழங்குவதற்கு தாம் அனுமதிக்கப்போவதில்லை என்றும் அறிவித்துள்ளது.

(39-ம் பக்கம்...)




## வாகன தகர்ப்பு வெடிபொருள் மீட்பு



(குருமன்காடு)

வவுனியா உக்குளாங்குளம் பகுதியில் 15 கிலோ எடை உடைய 40

## எண்ணெய் குதங்கள் இந்தியாவுடன் பங்கு!

(கொழும்பு)

திருகோணமலை- சீனக்குடாவில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியாவும் இலங்கையும் இணைந்து, கூட்டாக இயக்கவுள்ளதாக பெற்றோலியத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு 40

## கிணற்றில் வீழ்ந்து குடும்பப் பெண் பலி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி, மட்டுவில் பகுதியில் கிணற்றில் தவறி வீழ்ந்து குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

இதில் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி பகுதியை சேர்ந்த நடேசு பராசக்தி (வயது 52) என்பவரே உயிரிழந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சடலமாக மரண விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மதியவேளை சமையலுக்காக 40

## மரம் முறிந்ததில் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

மரம் முறிந்து உடலின் மேல் விழுந்ததில் நெற்றியில் படுகாயமடைந்த குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் யாழ் போதனாவைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டையை சேர்ந்த சிவசம்பு பொற்கொடி (வயது 77) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்

நேற்றைய தினம் குறித்த குடும் 39

## வழுக்கி வீழ்ந்த குடும்பஸ்தர் சாவு

(யாழ்ப்பாணம்)

கனடாவில் இருந்து வந்த புலம்பெயர் தமிழரான குடும்பஸ்தர் ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலை குளியலறையில் வழுக்கி விழுந்து படுகாயமடைந்ததன் காரணமாக நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளார்.

கனடாவில் வசித்து வருபவரும் யாழ். திருநெல்வேலி வடக்கை சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான இளையதம்பி 39

## யாழ்.,கிளியில் இன்புளுவன்சா வைரஸ் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்புளுவன்சா வைரஸ் நோயின் தாக்கம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அதிகமாக இருக்கி 39

## வடக்கு பட்டதாரிகளுடன் ஜனாதிபதியின் செயலர் நாளை யாழில் சந்திப்பு

### நியமனம் தொடர்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்).

தொடர் போராட்டத்தில் ஈடுபடும் வடமாகாண வேலையற்றபட்டதாரிகளை ஜனாதிபதியின் செயலாளர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

யாழ்.குடாநாட்டிற்கு நாளை சனிக்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்க செயலாளரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் செயலாளருமான பீ.பி. அபயகோன் விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

யாழ். வருகை தரும் அவர் இந்த மாத இறுதிக்குள்வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பாக நாளை சனிக்கிழமை வடமாகாண வேலையற்ற பட்டதாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

ஆகவே, குறித்த கலந் 04

## ரூ.9 இலட்சம் கோடிகள் கடன்!

(கொழும்பு)

தற்போதைய நிலையில் ரூபாய் 9 லட்சம் கோடிகளை இலங்கை கடனாக கொண்டுள்ளது என பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள காணொளி ஒன்றின் மூலமாகவே இதனைக் கூறியுள்ளார். இந்நிலையில், இலங்கை நாடும். நாட்டு மக்களும் 9 இலட்சம் கோடிகளை கடனாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் சுமார் 5 இலட்சம் வரையில் உலக வங்கிக்கு கடனாக செலுத்த வேண்டிய நிலையில் காணப்படுகின்றனர்.

9 இலட்சம் கோடிகள் என்பது 39

## நீதித்துறையில் ரணில் தலையீடு விமலின் விடுதலைக்கு விக்கிரமபாகு கண்டனம்

(கொழும்பு)



நீதித்துறையின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தி ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் நிலைநாட்டுவதாக வாக்குறுதி அளித்து ஆட்சி பீடம் ஏறிய தற்போதைய தேசிய அரசாங்கத்தின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நீதித் துறையில் 39

## இலங்கைக்கு ஜப்பான் 6,300 கோடி நிதியுதவி

(டோக்கியோ)

மூன்று அபிவிருத்தித் திட்டங்களுக்கு 6ஆயிரத்து 300 கோடி ரூபாயை (45 பில்லியன் யென்) இலங்கைக்கு ஜப்பான் நிதியுதவியாக வழங்கவுள்ளது.

டோக்கியோவில் நேற்று முன்தினம் நடநத இலங்கை - ஜப்பானிய உச்சி மாநாட்டில் இந்த நிதியுதவிக்கு இணக்கம் காணப்பட்டது.

இலங்கை - ஜப்பானிய பிரதமர்களின் முன்னிலையில், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவரும், ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவரும் இதுதொடர்பான உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

ஜப்பான் வழங்கவுள்ள 6 ஆயிரத்து300 கோடி ரூபாய் நிதியில் இரண்டு கடன் உதவித் 39

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(சி-8108)
CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
follow us cnrworldwideexpress

விக்கி லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சி பாடசாலை

(சி-8104)
இல.136/1 பலாலி வீதி,
பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

**உயர் கலைக் கல்லூரி**

தொழில்நுட்ப பிரிவு

2019 A/L (புதிய பிரிவு II)

**E-Tec**

நிறோஜன் (பொறியியல் விரிவுரையாளர்)

**Bio - Tec**

திருக்குமரன் (நெல்லியடி மகா வித்தியாலயம்)

**SFT**

ராகவன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி)

ஆரம்பம்: 15.04.2017 நாளை சனிக்கிழமை, 9.00 மணி

(2017 - Practical Class - Bio Tec - E Tec)

இடம்: குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். 077 170 3549

(8724)

# மாட்டுவண்டி சவாரிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான மாட்டுவண்டி சவாரி போட்டி சிங்கள - தமிழ் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் நாளை மறுதினம் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.தென்மராட்சியில் உள்ள சரசாலை குருவிக்காடு சவாரித்திடலில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் A,B,C,D என நான்கு பிரிவுகளில் நடைபெறும் மாட்டு வண்டிச் சவாரி போட்டியில் முதலிடத்தைப் பெறுகின்ற போட்டியாளர்களுக்கு தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-15)

சுன்னாகத்தில் **இனிதா**

சித்த ஆயுர்வேத முறிவு, நெரிவு வைத்தியசாலை


சகலவிதமான முறிவு, நெரிவு, மூட்டுவலி, முள்ளந்தண்டு வடம் பாதிப்பு, பழைய நோ போன்றவற்றுக்கான சித்த ஆயுர்வேத முறைப்படி மிகச்சிறந்த முறையில் வைத்தியம் செய்யப்படும்.

பார்வை நேரம்: காலை 8.30 - மாலை 6.30 வரை

தற்போது புதிய முகவரியில்
சுகந்தி பில்டிங்,
மார்க்கட் லேன், சுன்னாகம்.
கிளை:- சிவன் பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

Dr.S. சௌந்தரராஜன்
077 178 4196
021 490 7623

(8588)



**பட்டதாரிகள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குமான**

**அவசர கலந்துரையாடல்**

இடம்:
அங்கஜன் இராமநாதன் பிரதான அலுவலகம்
80A, கோவில் வீதி, நல்லூர்.

காலம்:
15.04.2017 சனிக்கிழமை

நேரம்:
3.00 மணி பிற்பகல்

விடயம்:
நியமனம், பிரச்சினைகள் தொடர்பானது

கலந்துரையாடுவோர்:
ஜனாதிபதியின் செயலாளர்,
ஸ்ரீ லங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்க செயலாளர்,
ஜனாதிபதியின் ஒருங்கிணைப்பாளர்

*அனைத்து பட்டதாரிகள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் வருகை தந்து பயன்பெற அழைக்கின்றேன்.*

அங்கஜன் இராமநாதன்
பாராளுமன்ற உறுப்பினர்

(8727)


அனைருக்கும் இனிய சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்

Rube Since 1982 Jewellery

நம்பிக்கை, கைராசி மற்றும் தரம்குன்றா

தங்கநகை உலகில் 34 வருடம் அனுபவம் வாய்ந்த நாங்கள் உலகின் பல பாகங்களிலும் இருக்கும் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கிக் கொண்டிருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.





ரூபி ஜுவல்லறி

எதிர்வரும் 28, 29 ஆம் திகதி அட்சய திருதியை தினத்தன்று எமது ரூபி ஜுவல்லறியில் தங்கநகையினை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அன்பளிப்புக்கள் காத்திருக்கின்றன.

குலுக்கல் முறை மூலம் தெரிவுசெய்து பெறுமதிமிக்க பரிசில்களை அள்ளிச்செல்ல அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வாடிக்கையாளர்கள் முற்கூட்டியே தங்களுக்கு விருப்பிய நகைகளை ஓடர் செய்து சிரமத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இல: 227 - 229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 6919, 0777 344 074

(C-8100)



(8726)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அரசியல் தலைமைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களுக்கான ஒரு புதிய யுகத்தை படைப்போம்

## புதுவருட வாழ்த்துச் செய்தியில் முதலமைச்சர் அழைப்பு

எமக்கு பல நன்மைகளை பெற்றுத்தந்த துர்முகி வருடத்தை அன்புடன் வழி அனுப்பி புதிதாக பிறக்கவிருக்கும்ஹேவிளம்பிவருடத்தை மகிழ்வுடன் வரவேற்கும் இச் சந்தர்ப்பத்தில் எமது மக்களுக்கு புத்தாண்டு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

வருடங்கள் பலவந்து போனாலும் தமிழ் மக்களின் நிலை என்றுமே கேள்விக் குறியாகவே எஞ்சி நிற்கின்றன. உறவுகளைத் தொலைத்தவர்களின் கண்ணீர்க் கதைகள், வீடுகள் நிலங்களை இழந்தவர்களின் சோகக் கதைகள், வேலையற்ற பட்டதாரிகளின் ஏக்கப் பெருமூச்சு என இன்னோரன்ன துன்பங்களுக்கு மத்தியில் பிறக்கவிருக்கும் இப்புத்தாண்டில் எமது துன்ப துயரங்கள் எம்மை விட்டு அகலவும் சிறையில் அடைக்கப்பட்ட எமது இளைஞர்கள் தமது உறவுகளுடன் இணைந்து கொள்ளவும் மீனவர்களின், வணிகர்களின் தொழில் முயற்சிகள் மேம்படவும் இப் புத்தாண்டு வழி வகுக்கும் என்ற நம்பிக்கையில் இப் புத்தாண்டை வருக வருக என வரவேற்போமாக.

இப் புதியஆண்டில் எம்மிடையே காணப்படுகின்ற காழ்ப்புணர்வுகள்,விரோதங்கள் அனைத்தும் அகல அரசியல் தலைமைகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து தமிழ் மக்களுக்கான ஒரு புதிய யுகத்தை படைக்க பாடுபட வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன். மக்களின் தேவைகளையும் அவர்களின் எதிர் பார்ப்புக்களையும் விஞ்சக் கூடிய வகையில்வடமாகாண சபையின்செயற்பாடுகள் அமைவதுடன் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள் என அரசியல் பிரமுகர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டு வடமாகாணத்தை முன்னேற்றுகின்ற ஒரே சிந்தனையுடன் செயற்படுவதற்கு இப்புத்தாண்டு வழிவகுக்கும்என்ற நம்பிக்கையுடன் இப் புத்தாண்டு அனைவருக்கும் சுபீட்சத்தையும் சுகவாழ்வையும்மன அமைதியையும்வழங்கவேண்டும்என வாழ்த்திஎனதுவாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.



நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர், வடமாகாணம்

## நல்லிணக்கம், சகவாழ்வை பேணும் நாடாக பலமாக எழுச்சி பெறுவோம்

### ஜனாதிபதி வாழ்த்துச் செய்தி

புவியில் உயிரினங்கள் தோன்றிய காலம் முதல் மானிட சமுதாயம் இயற்கையோடு கொண்டிருக்கும் பௌதீக மற்றும் ஆன்மீக பந்தத்தினை அடுத்த தலைமுறைக்கு கற்றுக்கொடுக்கும் படிப்பினைகளாகவே சூரியன் மீன இராசியில் இருந்து மேட இராசிக்குச் சஞ்சரிக்கும் சங்கிராந்தியின் அடிப்படையில் அமைந்த சித்திரைப் புத்தாண்டின் பாரம்பரியங்கள் அமைந்துள்ளன.

கமத்தொழிலின் சம்பிரதாயங்கள் நவீன்மயமாகியுள்ள இக்காலப்பகுதியிலும் சௌபாக்கியத்தை அடிப்படையாகக் கொண்ட சித்திரைப் பிறப்பைக் கொண்டாடுவதானது எம் மனங்களில் காணப்படும் ஆன்மீக கலாசாரத்தின் தொன்மையை எடுத்துக்காட்டுகின்றது. மனிதனின் செய்ந்நன்றி மறவாத குணத்திற்கும் நிதர்சனமாகவே புத்தாண்டுப் பாரம்பரியங்கள் அமைகின்றன.

அத்தோடு தனது வாழ்க்கைக்கு வலுவூட்டிய சுற்றாடலுக்கு மனிதர்களால் செலுத்தப்படும் நன்றிக்கடனைப் போலவே ஏனைய சமூகங்களுடன் ஏற்பட்டிருக்கும் நெருங்கிய தொடர்புகளை இற்றைப்படுத்தலும் புத்தாண்டு சம்பிரதாயங்களினால் உறுதிப்படுத்தப்படுகின்றது. புத்தாண்டுபஞ்சாங்கம்மூலம் அதற்கான கால அட்டவணை வழங்கப்படுவதனூடாக நேர முகாமைத்துவத்திற்கும் புத்தாண்டு பாரம்பரியங்கள் முன்னுரிமை வழங்குவதாக அமைகின்றன. அத்துடன் குறிப்பிட்ட சுப வேளையில் மேற்கொள்ளப்படும் புத்தாண்டு கைவிசேடம் கொள்கைப் பிடிப்புடன் வாழும்பண்பைஎதிரொலிக்கச் செய்யும் ஆழமான கட்டமைப்பாகவும் அமைகின் றது.

பிற்போக்குச் சிந்தனைகளிலிருந்தும் பழைமைவாத போக்கிலிருந்தும் விடுபட்டு புதிய மனிதனாக உருவாக வேண்டும் என்பதே சித்திரைப் புத்தாண்டு காலத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து சம்பிரதாயங்களினதும் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பாகும்.



அவ்வாறு புதிய சிந்தனைகளுடன் புதுப்பிக்கப்படுவதனாலேயே புத்தாண்டு எமது வாழ்வின் புதியதொரு ஆரம்பமாக கருதப்படுகின்றது.

ஆகையால் வென்றெடுத்த வெற்றியை மேலும் நிலை பெறச் செய்வதுடன் நல்லிணக்கம், சகவாழ்வு ஆகியவற்றை பேணும் நாடாக பலமாக எழுச்சிபெறுவோம் என மலர்ந்துள்ள இந்த புத்தா ண்டில் உறுதி கொள்வோம்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் சகல இலங்கையர்களுக்கும் சௌபாக்கியம், சமாதானம் மற்றும் மகிழ்ச்சி நிறைந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

மைத்திரிபால சிறிசேன
ஜனாதிபதி

## இந்திய அரச நிதியுதவியுடன் 900 மத்திய நிலையங்கள்

இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன், சிறுநீரக கழிவுகளை வடிகட்டி, இரத்தக் கசிவுகளைப் பெறும் 900 மத்திய நிலையங்களை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக, சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். வடமத்திய மாகாணத்தில் மட்டுமன்றி, நாட்டின் பல பிரதேசங்களில், சிறுநீரக நோயானது அதிகரித்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)



## புதிய அரசியலமைப்பானது உண்மையான நல்லிணக்கத்துக்கு வழிகோல வேண்டும்

### வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் அவா

இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி, பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் எம் தமிழ் உறவுகளுக்கும் எங்களுடன் சேர்ந்து புத்தாண்டை அனுஷ்டிக்கும் எமது சிங்கள சகோதரர்களுக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனம் மிக மகிழ்கின்றேன்.

எமது தமிழ் வருடங்கள் அறுபதாகும். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெயர் தாங்கியுள்ளதுடன், அவை மழை,காற்று,பயிர்வளம் போன்ற இயற்கையின் பலாபலன்களை மாற்றி அமைக்கும் தன்மையினைக் கொண்டவையாகவும் விளங்குகின்றன. அந்த வருடங்களின் வரிசையில் 31 ஆவது வருடமான ஹேவிளம்பி வருடம் இவ் வருடம் சித்திரைமாதம் 14 ஆம் திகதியாகிய இன்று பிறக்கின்றது.

புத்தாண்டு நன்னாளில் எம்மவர்கள் தமது பாவங்கள், தோஷங்கள் நீங்க வேண்டி, மருந்துவகை, மலர்வகை மற்றும் வாசனைத் திரவியங்கள் கொண்டு ஆலய அர்ச்சகர்களால் காய்ச்சப்படும்மருத்துநீரைத் தலையிலே தேய்த்து, ஸ்நானம் செய்து, புத்தாடைஅணிந்து,உலகின் கண்கண்ட தெய்வமாய் விளங்கும் சூரியபகவானுக்கு இல்லங்களில் பொங்கலிட்டு [illegible] வழிபாடு செய்து, [illegible]பெற்றோர், பெரியோரிடம் ஆசிபெற்று, அறுசுவை உணவு உண்டு மகிழ்ந்திருப்பது பாரம்பரிய மரபாகும். அன்றையநாளில் அவ்வாறு நடந்து கொள்வதனால் அந்தவருடம் முழுவதும் மக்களின் மனங்களில் மகிழ்ச்சி நிலவும் என்பது ஐதீகமாகும்.

புத்தாண்டு பிறக்கும் போது மக்கள் மனங்களில் எதிர்பார்ப்புக்கள் பல உண்டாவது இயல்பானதாகும். அவ் எதிர்பார்ப்புக்களில் பிரதானமாக, இவ்வாண்டில் முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் புதிய அரசியலமைப்பானது புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வை வழங்கும் வகையில் அமைய வேண்டுமெனவும் அவ் அரசியலமைப்பு இலங்கை அரசியல் வரலாற்றில் ஒருபுதிய அத்தியாயத்தை ஏற்படுத்துவதாக அமைந்திட வேண்டுமெனவும்,அது உண்மையான நல்லிணக்கத்திற்கு வழிகோல வேண்டுமெனவும் இப்புத்தாண்டு நன்னாளில் இறையருளை இறைஞ்சுவோம். அதுபோல தமிழ்மக்கள் தற்பொழுது அனுபவிக்கும் துன்பங்கள், ஏமாற்றங்கள், ஏக்கங்கள் மற்றும் ஒதுக்கல்களில் இருந்துமீண்டு அவர்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வகையில் அரசாங்கம் செயற்படவேண்டும் என்ற எமது கோரிக்கையையும் இவ்வேளையில் வெளிப்படுத்துகின்றேன்.

இந்நாட்டின் பெரும்பான்மை இனத்தவரான சிங்கள மக்களுக்கும் சிறுபான்மை இனத்தவரான தமிழ் மக்களுக்கும் பொதுவான புத்தாண்டாக சித்திரைப் புத்தாண்டு கொண்டாடப்படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். இப்புத்தாண்டை ஈரினத்தவர்களும் பொதுவாக மகிழ்வுடன் கொண்டாடுவது போன்று சகல விடயங்களையும் நல்லுறவுடன் கையாளும் சகஜநிலை இந்நாட்டில் தோன்றி இன நல்லிணக்கம் ஏற்பட இப்புத்தாண்டு வழி சமைக்கட்டும்.



அந்தவகையில் இனங்களுக்கிடையில் ஒற்றுமை, நல்லுறவு, புரிந்துணர்வு ஏற்பட்டு சாந்தி, சமாதானம் மேலோங்கி இந்நாடு அமைதிப் பூங்காவாக மிளிர்ந்திட, பிறக்கும் ஹேவிளம்பி புத்தாண்டில் நல்லன வெல்லாம் நடந்தேறிட வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அனைவருக்கும் எனது புத்தாண்டு நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இரா.சம்பந்தன்.பா.உ.,
எதிர்க்கட்சித் தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பைக்கு எதிரான போட்டியில் ஹோலி களமிறங்குகிறார்



ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில், இன்று மும்பை அணிக்கு எதிரான போட்டியில் பெங்களூர் அணி தலைவர் விராட் ஹோலி விளையாடுகிறார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் போது இந்திய அணித் தலைவர் விராட் ஹோலிக்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து, அவர் அந்த தொடரில் இருந்து பாதியிலேயே வெளியேறினார். தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல். தொடரிலும் அவர் களமிறங்கவில்லை. பெங்களூர் அணியின் தலைவராக ஹோலி, அந்த அணியின் முதல் மூன்று போட்டிகளிலும் களமிறங்காததால் ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

இந்நிலையில், தோள்பட்டை காயத்தில் இருந்து குணமடைந்துள்ளதாக விராட் ஹோலி கூறியதால், மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிராக நடைபெறும் போட்டியில் பங்கேற்பார் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அவர் ஐ.பி.எல். போட்டிக்கு திரும்புவதை பி.சி.சி.ஐ. தற்போது உறுதி செய்துள்ளது.

இதுகுறித்து பி.சி.சி.ஐ. வெளியிட்டுள்ள அறிக்கையில், "விராட் ஹோலி மீண்டும் போட்டியில் விளையாடும் அளவுக்கு உடற்தகுதி பெற்றிருப்பதாக பி.சி.சி.ஐ. மருத்துவக் குழுவானது கடந்த புதன் உறுதி செய்தது. ரோயல் சலெஞ்சர்ஸ் அணியின் அடுத்த ஆட்டம் பெங்களூரில் இன்று 14ஆம் திகதி நடைபெறுகிறது. மும்பை அணிக்கு எதிராக நடைபெறும் இந்தப் போட்டியில் விராட் ஹோலி விளையாடுவார்" என தெரிவித்துள்ளது.

. பெங்களூர் அணி, இதுவரை விளையாடிய 3 போட்டிகளில் ஒரு போட்டியில் மட்டுமே வெற்றி பெற்றுள்ள நிலையில், தலைவர் ஹோலியின் வருகை அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது. (க)

# கம்பீரின் அதிரடியால் பஞ்சாப்பை 8 விக்கெட்டால் வென்றது கொல்கத்தா



ஐ.பி.எல் இருபது - 20 பஞ்சாப் அணிக்கு எதிரான போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. ஐபிஎல் இருபது -20 சீசன் 10 போட்டியில் நேற்று கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை எதிர்கொண்டது. நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து களமிறங்கிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 170 ஓட்டங்களை குவித்தது. இதனையடுத்து கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு 171 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதன்பின் களமிறங்கிய கொல்கத்தா அணி தொடக்கத்தில் இருந்தே அதிரடியாக ஆடியது. அதிரடியாக ஆடிய தொடக்க வீரர் சுனில் நரேன் 18 பந்துகளில் 37 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதன்பின் 16.2 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழந்து அந்த அணி வெற்றி இலக்கை எட்டியது. கொல்கத்தா அணியில் அதிகபட்சமாக தலைவர் கம்பீர் 72 ஓட்டங்கள் எடுத்தார்.

# ஓய்வு முடிவை திரும்பபெற்ற மே.தீவுகளின் ஜெரோம் டெய்லர்



மேற்கிந்திய தீவுகள் வேகப்பந்து வீச்சாளர் ஜெரோம் டெய்லர் 9 மாதத்திற்குப் பிறது தனது ஓய்வு முடிவை திரும்பப் பெற்றுள்ளார். அணியின் தேர்விற்காக காத்திருக்கிறார்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜெரோம் டெய்லர். மேற்கிந்திய தீவுகள் அணிக்காக 46 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவர், கடந்த 9 மாதங்களுக்கு முன்பு சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

32 வயதாகும் டெய்லர் தற்போது 9 மாதங்களுக்குப்பின் மீண்டும் சர்வதேச அணிக்கு திரும்பும் வகையில் ஓய்வு முடிவை திரும்பப் பெற்றுள்ளார்.

இதுகுறித்து ஜெரோம் டெய்லர் கூறுகையில் "இன்னும் ஏராளமான போட்டிகள் எனக்காக உள்ளன என்று நம்புகிறேன். மேற்கிந்திய தீவுகள் டெஸ்ட் அணியில் இடம்பிடித்து இன்னும் ஏராளமான போட்டியில் என்னால் விளையாட முடியும். அணியில் என்னை தேர்வு செய்தால், மேற்கிந்திய தீவுகள் அணியின் வெற்றிக்கு உதவும் வகையில் சிறப்பாக செயல்படுவேன். தற்போது ஏராளமான இளம் வீரர்கள் உள்ளனர். அவர்களுடன் இணைந்து என்னுடைய அனுபவத்தால் அணியை முன்னோக்கி எடுத்துச் செல்ல முடியும்" என்றார்.

இதுகுறித்து மேற்கிந்திய தீவுகள் அணியின் சேர்மன், டெய்லர் தனது ஓய்வு முடிவை திரும்பப் பெற்றதை வரவேற்றுள்ளார்.

டெய்லர் 46 டெஸ்ட் போட்டிகளில் 130 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ளார். (க)

# ஜனாதிபதியின் ...

துரையாடலில் பங்கேற்கும் முகமாக வடமாகாணத்திலுள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் நாளை முற்பகல் 10 மணிக்கு முன்னதாக யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக ஒன்று கூடுமாறு வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் கேட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதியின் செயலாளருக்கும் பட்டதாரிகளுக்குமிடையிலான சந்திப்பு தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான அங்கஜன் இராமநாதன் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தனது யாழ். அலுவலகத்திற்கு வருகைதரும் ஜனாதிபதியின் செயலாளருடன் வடக்கு வேலையற்ற பட்டதாரிகள் சந்தித்து உரையாட முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் தமக்கான நிரந்தர வேலைவாய்ப்புக் கோரி கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி யாழ் . மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக ஆரம்பித்த காலவரையற்ற போராட்டம் நேற்று வியாழக்கிழமை 46 ஆவது நாளாகவும் தீர்வின்றி முன்னெடுக்கப்பட்டது.

இதுவரை மத்திய, மாகாண அரசாங்கங்களால் தமக்கான சாதகமான பதிலைதுவும் வழங்கப்படாத காரணத்தால் நேற்றைய தினம் ஒரு நாள் அடையாள உணணாவிரதப் போராட்டத்தில் வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஈடுபட்டிருந்தனர்.

இந்த நிலையில் தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை தமது போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என உறுதிபடத் தெரிவித்துள்ள வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள், இன்று சித்திரைப் புத்தாண்டு தினத்தையும் கொண்டாடுவதைத் தவிர்த்து கறுப்புச் சித்திரைப் புத்தாண்டாகப் பிரகடனப்படுத்தத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ - 4,9)

# குடும்பப்பெண் சடலமாக வீட்டுக் கிணற்றிலிருந்து மீட்பு

(மல்லாவி )

வவுனியா கூமாங்குளம் பகுதியில் உள்ள வீட்டுக் கிணற்றில் இருந்து குடும்பப்பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள கூமாங்குளம், வள்ளுவர் கோட்டம் பகுதியிலையச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 12.45 மணியிலிருந்து காணாமல் போயிருந்தார். இவரை அவரது உறவினர்கள் தேடிய நிலையில் இரவு 7.30 மணியளவில் வீட்டு வளவில் உள்ள கிணற்றில் சடலமாக கண்டு பிடிக்கப்படுள்ளார்.

இதனையடுத்து பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டநிலையில்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

கூமாங்குளத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான சிறிகாந்தன் புஸ்பலதா (வயது 47) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது கணவர் இவரை விட்டுப் பிரிந்த நிலையில் மனமுடைந்த நிலையில் வாழ்ந்து வந்த இவர் தற்செயலாக தவறி வீழ்ந்துள்ளதாக விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதையடுத்து பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம்நேற்றுக்காலை ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-15)



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடந்த பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவன ஈர்ப்பு போராட்டம் நேற்று 53ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தமது உறவுகள் தொடர்பிலான தகவல்கள் வெளியிடப்பட வேண்டும் என வலியுறுத்தி கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் குறித்த போராட்டம் இரவு பகலாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.(செ -15. 312)


## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### வேலுப்பிள்ளை வேதநாயகம்

(வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் ஓய்வுநிலை அலுவலர்)

மலர்வு 25 - 08 - 1941



உதிர்வு 14 - 04 - 2011

ஆலம் விழுதுகள் போல் உறவுகள்,
ஆயிரம் இருந்துமென்ன
வேரென நீர் இருந்தீர்
அதில் நாம் வீழ்ந்து விடாதிருந்தோம்.
இம் மண்ணில் நாம் உள்ளவரை
தங்கள் நினைவுகளும் எம்முடன்
இருக்கும்....

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
இல.98, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்
([illegible])

## காணி விற்பனை

சிறிய முதலீடு நிரந்தர வருமானம். A9 வீதி நுணாவில் சந்தி, மட்டுவில் வீதியில் 300m தூரத்தில் 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு. நல்ல சூழலில் வீடு கட்ட, தென்னை, மா, பலா, தேசிக்காய் மரங்கள் வைத்து வருமானம் பெற உகந்த இடம்.

1 பரப்பு - 150 000/= மட்டுமே (8728)

தொடர்புகளுக்கு : 0778730129


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமை கோரப்படாத நிலையில் கோடிக்கணக்கான சொத்துக்கள்

## பிரதி அமைச்சர் ரஞ்சன் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

கோடிக்கணக்கான பணமும் சொத்துகளும் இப்போது இருக்கின்றது. ஆனால்அதற்கு உரிமை கொண்டாட எவரும் இல்லை என பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் வெளியிட்டுள்ள காணொலி ஒன்றின் மூலமாகவே இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

சி.எஸ்.என்.நிறுவனத்திற்கு சொந்தமான 236 மில்லியன் பெறுமதியான பணத்தில் 157 மில்லியன்களுக்கு உரிமையாளர் இப்போது இல்லை.

157 மில்லியன் பணம் இருக்கின்றது. ஆனால் அதற்கான உரிமையாளர் எவரும் இல்லை. தற்போது அந்தப் பணம் அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதனை பெறுப்பேற்க எவரும் இல்லை. அதனால் அதனை அரச சொத்தாகவே மாற்றும் படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த பணத்தினை ஏழை மக்களுக்கு கொடுக்கும் படி பிரதமரிடமும் ஜனாதிபதியிடமும் நான் பரிந்துரை செய்துள்ளேன்.

அதேபோன்று மல்வானையில் பசில் ராஜபக்ஷவிற்கு சொந்தமான இடம் எனக் கூறப்பட்ட இடத்திற்கும் தற்போது உரிமையாளர் எவரும் இல்லை.

18 ஏக்கர் இடம் உள்ளது. அந்த இடத்திற்கு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால்அதற்கு உரிமைகோரி எவரும்வரவில்லை. அதனால் அந்த இடத்தினை பொலிஸ் பயிற்சி நிலையமாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

இவற்றிற்கு ராஜபக்ஷர்கள் உரிமை கோருவார்கள் என நினைக்கின்றேன். சி. எஸ். என். நிறுவனத்தின் உரிமையாளர் யோஷித ராஜபக்ஷ முதுகெலும்பு உள்ளவர் என்றால் இப்போது 157 மில்லியன் எனது என்று முன்வர வேண்டும்.

அதேபோன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, "நான் ஒரு டொலராவது கொள்ளையிட்டேன் என நிரூபிக்க முடியுமானால் எனது வயிற்றை வெட்டிக் கொள்வேன் என்று தெரிவித்திருந்தார்.

இப்போது முடியுமானால் அந்தக் கோடிக்கணக்கான பணம் எனது என்று கூறி முன்வாருங்கள். அரசின் நடவடிக்கைகளால் பரிதாப நிலையினை மகிந்தவும், திருடர்களும் இப்போது சந்தித்து கொண்டு வருகின்றார்கள்.

மேலும் ராஜபக்ஷர்கள் மீது தனிப்பட்ட விரோதம் காரணமாக இவற்றினை செய்யவில்லை. நாட்டிற்காகவே இதனை செய்கின்றோம்.

நாட்டில் முறையான நீதி நடைபெறுகின்றது. இதனை நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கின்றது.

மக்களின் பணம் மக்களுக்கு சென்று சேரும் அதற்கான முயற்சியிலேயே இப் போது அரசு ஈடுபட்டு வருகின்றது எனவும் ரஞ்சன் ராமநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



துர்முகி ஆண்டு முடிந்து மலரும் ஹேவிளம்பி புத்தாண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்நன்னாளில் எம்மவர்க்கு அருள் வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இன்பமே சூழும் இந்நன்னாளில் உலக உயிர்கள் அனைத்தும் நோய் நொடி இன்றி இன்புற்று வாழ அருள் வேண்டுகின்றோம்.

கடந்த துர்முகி ஆண்டு எமக்கு நல்ல ஆண்டாக அமைந்தாலும் பிறக்கும் ஹேவிளம்பி ஆண்டு எம் அனைவருக்கும் இன்னும் சிறந்த ஆண்டாக மலரவேண்டும் என எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பிறக்கும் இவ்வருடம் சாந்தி, சமாதானம் நிலவி அனைவரும் அன்புடன் வாழ வாழ்த்தி அமைகின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,
நல்லை ஆதீனம்.

# ஸ்ரீ.சுதந்திரக் கட்சியை மலினப்படுத்த முயற்சி

## மகிந்த குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மலினப்படுத்தும் முயற்சிகளில் அதன் தலைமைகள் ஈடுபட்டு வருவதாக கட்சியின் முன்னாள் தலைவர் மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பு ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இவ்வாறு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மக்களுடன் இருக்கும் பிரபலமான தொகுதி அமைப்பாளர்களை நீக்கி, பலவீனமான தொகுதி அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது கட்சியை மலினப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையாக கருதப்பட வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளினால் கட்சியை முன்னோக்கி நகர்த்த முடியாது. இந்த விடயங்கள் குறித்து மக்கள் மிகுந்த தெளிவுடன் இருக்க வேண்டும்.

கட்சியை நேசிக்காத கட்சி பற்றி கருதாத சிலர் கட்சியை பலவீனப்படுத்த முயற்சிக்கின்றனர்.

மக்கள் யாருடன் இருக்கின்றார்கள் என்பது இவர்களுக்கு தெரியவில்லை என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கற்பக விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் வசந்த மண்டப பூஜையுடன் ஆரம்பமாகி இடம் பெறும்.

தொடர்ந்து நாளை சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ-3)

★★★★★

யாழ். அத்தியடி அருள் மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்று நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (இ-3)

## விளையாட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழக வருடாந்த விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கலட்டி ஐக்கியவிளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும்.

கழகத் தலைவர் ந.காண்டீபன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கழக முன்னாள் தலைவர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (அவுஸ்திரேலியா) செல்லத்தம்பி சுரேந்திரன், சிறப்பு விருந்தினர்களாகநெல்லியடிபொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ் பரிசோதகர் ரணசிங்க பண்டார, கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத் தலைவர் கணேசன் திருமாலழகன் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய பிரதி அதிபர் நவரத்தினம் கிருஷ்ணகுமார், யா/ஸ்ரீ நாரதா வித்தியாலய ஆங்கில ஆசிரியை திருமதி. நவநீதராசா மாலதி, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிறிஜெகன் சத்தியபாமா, கிளி/ இராமநாதபுரம் அ.த.க.பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியை திருமதி விஜிதரன் தர்சிகா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## இராசி பலன்

14.04.2017
(சித்திரை 01, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6 மணிக்கு
திருதியை பிற்பகல் 4.38 மணிவரை
விசாகம் முற்பகல் 10.01 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
தமிழ்,சிங்கள புதுவருடம்,
பெரிய வெள்ளி **வளவன்**

| | | | |
|---|---|---|---|
| புத சுக் | சூரி செவ் | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அச்சுவினி | | |
| | | | ராகு |
| | சனி சந் | | குரு |

**மீனம்:** சுணங்கிய காரியங்கள் அனு கூலமாக நடைபெறலாம் விருப்பங்கள் நிறைவே விநாயகரை வழிபட வேண் டிய நாள், அன்பால் சாதித்து காட்டும் நாள்.

**மேடம்:** இறைவழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், உறவினர்கள் வழியில் சுப விரயங்கள் கூடும், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

**இடபம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்,வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** எதிர்கால நலனில் அதிக அ கறை காட்டுவீர்கள், உ வினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள் பொழுதுபோக்கு விடய களில் ஆர்வம் காட்டுவீர்கள்

**கடகம்:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்,புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்:** புதிய பொருட்சேர்க்கையுண்டு பெரிய மனிதர்களின் தொடர் கள் உங்கள் தகுதியை உயர் தும், மனதிற்கினிய சம்பவ கள் இடம் பெறலாம்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**தனுசு:** வழிபாட்டால் மகத்துவ காண வேண்டிய நாள், திட் மிட்ட காரியமொன்றில் தி திருப்பங்கள் ஏற்படலாம் மாற்றங்களால் ஏற்றம் பெ வீர்கள்.

**விருச்சிகம்:** விரும்பிய காரியங்கள் விரும்பியபடியே நடைபெறும் நாள், வருமானம் திருப்தி [illegible] சந்தோஷம் கிடைக்கும்.

**துலாம்:** வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறல் வடமராட்சி கிழக்கு மீனவர்கள் பாதிப்பு

தென்னிலங்கை மீனவர்களால் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் பாரிய துன்பங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவித்துள்ளனர். தென்னிலங்கை மீனவர்கள் யாழ். மாவட்டத்தின் காங்கேசன்துறை வரை வந்து சங்குத் தொழில், கடல் அட்டை பிடித்தல் போன்ற தொழில்களில் ஈடுபடுவதாக பிரதேச கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர். தென்னிலங்கை மீனவர்கள் கடலட்டை, சங்குத் தொழில் நிமித்தம் அதிகளவான சிலிண்டர்கள், வெளிச்சம் பாய்ச்சிகள், 40 எச்பி (40hp) வெளியிணைப்பு இயந்திரங்கள் என்பவற்றைப் பயன்படுத்துகின்றனர். இதனால் ஆழ்கடலிலிருந்து கரையை நோக்கி வரும் மீனினங்களின் வருகை மற்றும் செவ்வல் மீன்களின் வருகை முற்றுமுழுதாக குறைவடைந்து வருகிறது. இதனைவிட தென்னிலங்கை தொழிலாளர்களின் வெளியிணைப்பு இயந்திரங்களால் இப்பிரதேச மீனவர்களின் கரைவலைகள், முரல் வலைகள் என்பன சேதமடைய வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன என மீனவர்கள் தெரிவித்தனர்: இவற்றிற்கு மேலாக வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் முற்றுமுழுதாக கரையோரை மீன்பிடியை நம்பியே வாழ்கின் றனர். கடலட்டை, சங்குத் தொழிலானது இப்பிரதேசத்திற்கு முற்றிலும் ஒவ்வாத தொழிலாகும். எனவே வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினைக் கருத்திற் கொண்டு இத்தொழிலை நிறுத்துவதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வடமராட்சி கிழக்கு பிரதேச கடற்றொழிலாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-64)

# யாழில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுட்டிக்காட்டு

சித்திரைப்புதுவருடகொண்டாட்டங்களை முன்னிட்டு வெளி மாவட்டத்திலிருந்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு யாழ்.மாவட்டத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கஸ்ரன் ரனிஸ்ரஸ் தெரிவித்துள்ளார்.

இத் தினத்தில் குழப்பங்களை விளைவிப்பவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு உடன் தகவல் வழங்குமாறும் அவர் பொதுமக்களிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்-சிங்கள புத்தாண்டினை அடுத்து நாடு முழுவதும் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதேபோன்று யாழ்ப்பாணத்திலும் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் விசேட சமய வழிபாடுகளும் நடைபெறவுள்ளன.

இவ் வழிபாடுகள் மற்றும் நிகழ்வுகளின் போது எந்தக் குழப்பங்களும் ஏற்படாதவாறு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக ஆலயங்கள் மற்றும் பொது மக்கள் ஒன்று கூடும் இடங்களில் இப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக விசேட ரோந்து நடவடிக்கைகள் மற்றும் சிவில்உடையணிந்த பொலிஸ் அதிகாரிகளின் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மேலதிக பொலிஸார் வெளி மாவட்டங்களில் இருந்து அழைக்கப்பட்டு. பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

நிகழ்வுகள், சமய வழிபாடுகள் நடைபெறும் இடங்கள் மற்றும் பொது மக்கள் ஒன்று கூடும் இடங்களில் குழப்பங்களை ஏற்படுத்துபவர்கள் உடனடியாக கைது செய்யப்படுவார்கள்.

மேலும் மதுபோதையிலும் மோட்டார் சைக்கிள்களில் தேவையற்ற விதத்தில் திரிபவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

புதுவருட நிகழ்வுகள், சமய வழிபாடுகளில் குழப்பங்களை ஏற்படுத்துபவர்கள் தொடர்பில் பொது மக்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தால் உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எந்த நேரத்திலும் பொலிஸார் தயார் நிலையில் இருப்பார்கள்.எனவே யாராவது குழப்பம் விளைவிக்க முயற்சித்தால் அது தொடர்பில் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு தகவல் கொடுங்கள். குழப்பம் விளைவிப்பவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (இ-4)




# தேரும் தீர்த்தமும்

மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெறும். நாளை சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (இ-3)

# அலங்கார உற்சவம்

மாவை–கலட்டி–பிராங்கிளி அருள்மிகு ஸ்ரீ பராசக்தி அம்மன் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமைஆரம்பமாகிதொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் இடம்பெறவுள்ளது. (இ-3)

# கறுப்புக் கொடியுடன் இன்று போராட்டம்

## காணாமற் போனவர்களின் உறவினர்கள் அறிவிப்பு

மருதங்கேணியில் காணாமற் போனோரின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் சித்திரைப் புத்தாண்டு தினமான இன்று கறுப்பு கொடிப் போராட்டமாக இடம்பெறும் என அறிவித்துள்ளனர்.

மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் ஒரு மாதமாக நடைபெற்று வரும் கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு அரசிடமிருந்து சாதகமான பதில் எதுவும் கிடைக்கப்பெறாத நிலையில் இன்று சித்திரைப்புத்தாண்டு, பெரிய வெள்ளியினை முன்னிட்டு தாங்கள் இப்புத்தாண்டை துக்கதினமாக கறுப்பு ஆடைகள் அணிந்து கறுப்புக்கொடி கட்டி அனுஷ்டிக்கவுள்ளதாக காணாமற்போனோரின் உறவினர்கள் தெரிவித்தனர். (இ-60)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் நாளை 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறும். இப் பொதுக்கூட்டத்தில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளதோடு கல்லூரியின் முன்னைநாள் அதிபர்கள், ஆசிரியர்களுடனான சந்திப்பும் இடம்பெறும். எனவே சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# ஒன்றுகூடல்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்றுகூடல்எதிர்வரும் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் வடக்கு முதியோர் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. எனவே இந்நிகழ்வில் அனைத்து சிரேஷ்டப் பிரஜைகளையும் தவறாது சமுகமளிக்குமாறு செயலாளர் ந.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (இ-3)

# புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு (Orientation programme) எதிர்வரும் 24.04.2017 காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. மேலும் 2017ஆம் ஆண்டிற்கான முழுநேர மாணவர்களுக்கு 02.05.2017 செவ்வாய்க்கிழமை, பகுதி நேர மாணவர்களுக்கு 06.05. 2017 சனிக்கிழமை 1ஆம் பருவகால கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் ஆரம்பிக்கப்படும் என உதவிப் பதிவாளர் யோ.ரிசாந்தன் அறிவித்துள்ளார். (இ-3)

# காணாமற்போன உறவுகளை தேடியறிய அமைப்பு

## உறவினர்களால் மருதங்கேணியில் உருவாக்கம்





வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் காணாமல் செய்யப்பட்டோரின் உறவுகள் ஒன்றுதிரண்டு "வடமராட்சி கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் அமையம்" என்னும் அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இதுவரை காலமும் வடமராட்சி கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பாக இயங்குவதற்கு உத்தியோகபூர்வமான எந்த அமைப்பும் இருக்கவில்லை. இதனால் காணாமல் செய்யப்பட்டோர் விடயத்தில் ஒரு நிலைப்பாடாக செயற்பட முடியாத சூழல் காணப்பட்டது.

உருவாக்கப்பட்ட புதிய அமைப்பிடம் காணாமல் செய்யப்பட்ட வடமராட்சி கிழக்கைச் சேர்ந்தோரின் அனைத்து விபரங்களும் காணாமல் செய்யப்பட்ட ஆண்டு நடந்த சம்பவம் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போன்ற அனைத்து விபரங்களும் இருக்கும்.

இவ் அமையத்தின் தலைவராக திருமதி அருளானந்தம் புஸ்பராணி, செயலாளராக திருமதி.சிறீஸ்கந்தராசா விஜி, பொருளாளராக சுப்பிரமணியம் மகேஸ்வரி, இணைப்பாளர் தங்கராசா சித்திராதேவி உட்பட ஒவ்வொரு கிராமம் சார்பாகவும் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் மருதங்கேணியில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மேற்கொண்டுவரும் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் இந்த அமைப்பு உருவாக்கம் இடம்பெற்றது.

இந்த அமைப்பானது இனி வரும் காலங்களில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக உத்தியோகபூர்வமாக இயங்கும் எனவும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் உறுதியான தீர்வு எட்டப்படும் வரை எமது காலவரையறையற்ற போராட்டம் தொடரும் இதற்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தலைவராக தெரிவு செய்யப்பட்ட புஸ்பராணி தெரிவித்தார். இதன்போது காணாமல் செய்யப்பட்டோரின் பெருமளவான உறவுகள் கலந்து கொண்டிருந்தனர். (இ-89)


# நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்த கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த்தடுப்பூசி (A.R.V)கீழ்வரும்இடங்களில்வைத்துவழங்கப்படதிட்டமிட்டுள்ளது.

17.04.2017 மு.ப.9–மு.ப.11 மணி வரை நெடுக்குளம் தாய்மார் கழகம், மு.ப.11.30–பி.ப1 மணி வரை வசந்தபுரம் C.C சனசமூக நிலையம், பி.ப. 2.30–பி.ப 4மணி வரை கெலன் தோட்டம், 18.04.2017 மு.ப.9–மு.ப.11 மணி வரை 3ஆம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை சனசமூக நிலையம், மு.ப.11–பி.ப1 மணி வரை 1ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை சனசமூக நிலையம், பி.ப.2.30–பி.ப 4மணி வரை 2ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை சனசமூக நிலையம், 19.04.2017 மு.ப.9–பி.ப 11 மணி வரை எழிலூர் சனசமூக நிலையம், மு.ப.11–பி.ப1 மணி வரை 4ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை, பி.ப.2.30–பி.ப4 மணி வரை 5ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை, 20.04.2017 மு.ப.9–மு.ப.11 மணி வரை சுவாமியார் வீதி சிகிச்சை நிலையம், மு.ப 11– பி.ப 1 மணி வரை மகேந்திரபுரம்மணி வரை பி.ப.2.30–பி.ப.4 மணி வரை வளன்புரம், 21.04.2017 மு.ப.9–மு.ப 11 மணி வரை சென். மேரிஸ் கோயில் (A.V வீதி), மு.ப.11–பி.ப1 மணி வரை A.V.வீதி புகையிரத வீதி சந்தி, பி.ப.2.30–பி.ப.4 மணி வரை கொழும்புத்துறை விதானையார் லேன், 24.04. 2017 மு.ப.9–மு.ப.11மணி வரை பாசையூர் சனசமூக நிலையம், மு.ப.11–பி.ப1 மணி வரை ஈச்சமோட்டை சனசமூக நிலையம், பி.ப.2.30–பி.ப.4 மணி வரை புதுக்குடியிருப்பு, 26.04. 2017 மு.ப.9–மு.ப.11 மணி வரை பாண்டியன்தாழ்வு (புனித அன்னம்மாள் கோயில் அருகில்) மு.ப.11– பி.ப. 1 மணி வரை வில்வந்தெரு, பி.ப.2.30–பி.ப.4மணி வரை புளியடிசந்தி இலந்தைக்குளம் வீதி, 27.04.2017 மு.ப.9–மு.ப.11 மணி வரை கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம், மு.ப. 11– பி.ப. 1 மணி வரை விதானையார் லேன் ஈச்சமோட்டை, பி.ப.2.30–பி.ப.4 பாசையூர்மகப்பேற்று நிலையம், 28.04.2017 மு.ப.9–மு.ப.11 மணி வரை சுண்டிக்குளி சனசமூக நிலையம், மு.ப.11–பி.ப.4 மணி வரை மேலதிக பிரதேசம் என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கு ஜப்பான் ஆதரவு




(கொழும்பு)

இலங்கையில் இனங்களுக்கு இடையே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதனை இலக்காக கொண்டு தயாரிக்கப்படும் புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கு ஜப்பான் முழுமையான ஆத ரவை வழங்கும் என அந் நாட்டின் பிரதமர் சின்சோ அபே தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜப்பான் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு தரப்பு உறவுகள் குறித்த கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

டோக்கியோ நகரில் அமைந்துள்ள ஜப்பான் பிரதமர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இலங்கையின் துறைமுகம், போக்குவரத்து, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வேறு தேசிய மட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு விசேட ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் ஜப்பான் பிரதமர் சின்சோ அபே இதன்போது தெரிவித்தார். (இ-7)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

ஸ்ரீலங்கா பொலிஸ்க்கு, பொலிஸ் உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இவ்விண்ணப்பத்துக்கான திகதி இன்றுடன் நிறைவடைந்துள்ள போதிலும் மே மாதம் 2ஆம் திகதி வரை குறித்த விண்ணப்பத்துக்கான முடிவுத்திகதியை நீடித்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பத்தாயிரத்துக்கும்மேற்பட்ட பெண்பொலிஸ் உத்தியோகத்தர்கள், கான்ஸ்டபிள்கள் மற்றும் பொலிஸ் சாரதிகள் ஆகியோருக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

மேலும், வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த தமிழ் மொழி பேசத்தெரிந்த இளைஞர்கள் மற்றும் யுவதிகளை அதிகளவில் உள்வாங்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


**ENGLISH MEDIUM வகுப்புக்கள்**

அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் ENGLISH MEDIUM இல்SCIENCE, MATHS தனியாகவோ, குழுக்களாகவோ Gr.6, 7, 8, 9, 10GC.E,(O/L) மாணவர்களுக்கு வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும். T.P:-0715662897, 0715662847, 0776444160 (8576)

**இந்திய விபூதி விற்பனைக்கு**

எம்மிடம் இந்திய ஸ்ரீ சக்தி விலாஸ் ஜவ்வாது வாசனை விபூதியை (1kg), மொத்தமாகவும் (ரூ.100), சில்லறையாகவும் (ரூ.110) பெற்றுக்கொள்ளலாம். (8-7888)

**சிவா நறுமணப் பூங்கா**

இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்) - 021 222 2567


# ஐ.நா.தீர்மானத்தை நிறைவேற்ற அரசு முயற்சிக்கவில்லை

## பாக்கியசோதி சரவணமுத்து குற்றச்சாட்டு



ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான எவ்வித முயற்சிகளையும் அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக இல்லை என நல்லிணக்க கலந்தாலோசனை செயலணியின் செயலாளர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பான அரசின் செயற்பாடுகள் குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் அரசியலமைப்பு உருவாக்க பணிகளுக்கு முக்கியத்துவம்கொடுத்து செயற்பட்டு வருகின்ற நிலையில், ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதில் அக்கறை இன்றி அசமந்தப் போக்குடன் செயற்படுகிறது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரும் சரி, பின்னரும் சரி அரசாங்கம் இவ்விடயத்தில் அசமந்தப் போக்குடனேயே செயற்படுகிறது. எனவே, அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் சிவில் அமைப்புக்கள் தொடர்ந்து செயற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.(இ-7)

# கல்வி அமைச்சரின் அனுமதியின்றி 10 விடயங்களை செய்யக் கூடாது

(கொழும்பு)

அரச தேசிய பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல் உட்பட பாடசாலைகளுடன் தொடர்புடைய 10 நடவடிக்கைகளை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கல்வி அமைச்சர் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் எடுத்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல், அமைச்சின் கீழ் உள்ள சகல மேலதிகச் செயலாளர்களுக்கும், திணைக்களங்களுக்கும், நிறுவன பிரதானிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.



அத்துடன், ஊடகங்களுக்கு அறிவித்தல்களை விடுத்தல், சுற்றுநிருபங்களை வெளியிடுதல், பாடசாலை கட்டடங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட கல்வி உபகரணங்களை வழங்குதல் என்பவற்றுக்கும் கல்வி அமைச்சரின் நேரடி அனுமதி பெறப்படுதல் வேண்டும் எனவும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

தகவல் தொழில்நுட்ப பீடம் அமைத்தல், அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள், கல்வியுடன் தொடர்புடைய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுதல் போன்றவற்றுக்கும் கல்வி அமைச்சரின் அனுமதி அவசியமாகும்.

அமைச்சின் கொள்கைகளுக்கு மாற்றமாக செயற்படுவதாக கிடைக்கப் பெற்ற தகவல்கள் உறுதி செய்யப்பட்டதன் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)


**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 54<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில் Diploma/அரசதொழில்<br>தொ.இ: B/6072 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 29செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/5715 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 49<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/Lலண்டன் PR<br>தொ.இ: B/6073 | பிறப்பு: 1991 RC<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/5729 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: 33 சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L/பிரான்ஸ் PR<br>தொ.இ: B/6074 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 47செவ் 4 இல்<br>உயரம்: 5'2"தகைமை/தொழில்:NVQ<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5721 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 0<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc/சொந்ததொழில்<br>தொ.இ: B/6075 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>கி.பா: 64செவ் 1 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/5722 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் போராட்டத்தின் முடிவுதான் என்ன? பன்னங்கண்டி மக்கள் கேள்வி




கிளிநொச்சி பன்னங்கண்டி மக்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை 23 ஆவது நாளாகவும் தொடர்கின்ற நிலையில், காணி உரிமையாளர் சுமுக பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என அம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மலையகத்திலிருந்து இடம்பெயர்ந்த இம் மக்கள் சுமார் 27 வருடங்களாக பன்னங்கண்டி பிரதேசத்தில் வசித்து வருகின்றனர்.

இவர்களுள் சிவா பசுபதி கிராம மக்களுக்கு காணிகளை வழங்குவதாக உரிமையாளர் குறிப்பிட்டுள்ள நிலையில், தற்போது தமக்கும் தீர்வு வேண்டுமென கோரி சரஸ்வதி கிராமம் மற்றும் ஜொனி குடியிருப்பு மக்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்போராட்டத்தில் ஈடுபட்டுவரும் ஒருவர் கூறுகையில், "தம்மை வந்து சந்திக்கும் அரசியல்வாதிகள் இதுவரை எந்தவித முடிவையும் பெற்றுக்கொடுக்கவில்லை.

காணி உரிமையாளர் தமது கஷ்டங்களை கருத்திற்கொண்டு எம்முடன் சுமுக பேச்சுவார்த்தைக்கு வர வேண்டும்.

காணி உரிமையாளரின் முடிவை நாம் ஏற்க இருக்க தயாராக இருக்கின்றோம். அதேபோல் அவர் நல்லதொரு முடிவை பெற்றுக் கொடுப்பார் என நாம் நம்புகின்றோம்" என கூறினார்.

நீண்ட காலமாக வாழ்ந்து வரும் தமக்கு குறித்த காணியின் உரிமத்தை தருமாறு கோரியும், வீட்டுத் திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரியும் குறித்த பகுதி மக்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். குறித்த போராட்டம் தீர்வின்றி நேற்றும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

(2-5-15-312)

வன்னி வலம்

# போராட்டங்களை வலுப்படுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலம் உரிமைகளை வெல்லமுடியும்

## மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் தெரிவிப்பு

சர்வதேசம் எமக்கு தீர்வினை பெற்றுத்தரும் என நாம் வாய் மூடி மௌனிகளாக இருக்க முடியாது என தெரிவித்த மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை, எமது போராட்டங்களை வலுப்படுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் மூலமே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபை மனித வுரிமை பேரவையின் கூட்டத்தொடரில் கலந்து கொண்டதன் பின்னர் அங்கு ஏற்பட்ட நிலைமைகளும் அதனை தொடர்ந்து இனிவரும் காலங்களில் இலங்கையில் தமிழ் மக்கள் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பிலும் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மனிதவுரிமை பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்கு கால அவகாசம் கொடுக்கக் கூடாது எனவும் அவ்வாறு கால அவகாசம் கொடுத்தால் அது தமிழ் மக்களுக்கு ஆபத்து எனவும் தெரிவித்திருந்தனர்.

குறித்த அமர்வுக்கு முன்னரும் பல அமைப்புக்கள், பிரதிநிதிகள் தமது கருத்துக்களை தெரிவித்திருந்தனர்.

ஆனால் மனிதவுரிமை பேரவை இலங்கைக்கு கால அவகாசம்கொடுத்தது. ஆனால் அதை அக் கூட்டத்தொடரில் பங்குகொண்ட தமிழ் பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

இலங்கை ஏற்கனவே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே கால அவகாசம் கொடுக்கப்படுவதாக பேரவையினர் மற்றும் வேறு சில நாடுகள் தெரிவித்தன.

மேலும் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் திட்டங்கள் வகுத்து செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும் என அங்கு பங்கு கொண்ட ஒருசில நாட்டு பிரதிநிதிகள் இலங்கை அரசிடம் கேட்டுக் கொண்டனர்.

அதற்கு ஏற்றவகையில் செயற்பாடுகளை தாங்கள் முன்னெடுப்போம் என இலங்கை அரசு ஏற்றுக்கொண்டது. ஆனால் சர்வதேச பொறிமுறைக்கு இடமில்லை. உள்ளக பொறிமுறை தான் நடக்கும் என தெரிவித்து வருகிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் ஜெனிவா மனிதவுரிமை பேரவையோ மேற்குலக நாடுகளோ எங்களுக்கு தீர்வினை பெற்றுத் தரும் என நாம் வாய் மூடி மௌனிகளாக இருக்க முடியாது.

தற்போது எமது கள நிலைமைகளை அவதானிக்கும் போது ஒருசில பகுதிகள் மாத்திரம் போராட்டத்தில் ஈடுபடுவதும் ஏனைய பகுதியினர் அதை பாராமுகமாக இருப்பது கண்டுகொள்ள முடிகிறது.

எனவே எமது போராட்டங்கள் முழு வடிவம் பெற வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுடன் முழு தமிழ் சமூகமும் ஒன்றிணைய வேண்டும்.

அரசியல் சுயநிர்ணயம், எமது இருப்பு என்பவற்றை தக்க வைக்க நம்மை நாமே ஆளும் கட்சியை பெற போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதன் மூலம் தான் அவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த இரண்டு வருட கால அவகாசத்தில் இலங்கை அரசு எதையும் செய்யப் போவதில்லை என்பது ஏற்கனவே எமக்கு தெரிந்த உண்மையாக இருக்கின்ற நிலையில் இந்த காலப்பகுதியில் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதன் ஊடாகவும் போராட்டங்களை வலுப்படுத்துவதன் ஊடாகவும் தான் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-5-9)

# இரு பிரதேச வைத்தியசாலைகளுக்கு நோயாளர் காவு வண்டிகள் வழங்கல்

மன்னார் மாவட்டத்தில் உள்ள மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளாங்குளம் பிரதேச வைத்தியசாலை மற்றும் மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான் பிரதேச வைத்தியசாலை ஆகியவற்றில் நிலவிய நோயாளர் காவுவண்டி பிரச்சினைக்கு வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் வைத்தியகலாநிதி ஜீ.குணசீலன் எடுத்துக் கொண்ட முயற்சி காரணமாக தீர்வு கிடைத்துள்ளதாக மேற்படி வைத்தியசாலை அமைந்துள்ள பகுதி கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கடந்த 3 வருடங்களுக்கு மேலாக காணப்பட்ட நோயாளர் காவு வண்டி பிரச்சினை காரணமாக பின்தங்கிய பிரதேச கிராம மக்கள் அவசர சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அல்லது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உட்பட பிரதான வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்ல முடியாது பெரும் துன்பத்திற்கு உள்ளாகியதுடன், உயிராபத்துக்களையும் எதிர்நோக்கி வந்துள்ளனர்.

இந் நிலை தொடர்பாக பல தரப்பட்ட வர்களுக்கும் தெரியப்படுத்திய போதும் தீர்வின்றி காணப்பட்ட நிலையில், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலனிடமும் தமது குறையை முறையிட்டிருந்தனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளின் வனத்திற்கு கொண்டு வந்து வெள்ளாங்குளம் பிரதேச வைத்தியசாலைக்கு நோயாளர் காவு வண்டியை பெற்றுக் கொடுத்துள்ளார்.

மேலும் பல மாதங்க ளாக அம்புலன்ஸ் வண்டி இல்லாத நிலை காணப்பட்ட மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரிய பண்டிவிருச்சான் பிரதேச வைத்தியசாலைக்கு வெள்ளாங்குளம் பிரதேச வைத்தியசாலையில் தற்காலிகமாக பாவனையில் இருந்த நோயாளர் காவு வண்டி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

- ✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
- ✓ வடமாகாணக் கல்வியமைச்சின் அங்கீகாரம்

Duration: 1 Year
Entry Qualification: B.Ed. / P.G.D in Edu

## B.Sc. in Physical Education And Sports

✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்

Duration: 1 Year
Entry Qualification: 2 Year Diploma in Physical Education from any University/ Training College/ College of Education

**விண்ணப்ப கட்டணம்: Rs. 1000/-**
**நேர்காணலுக்கு அழைக்கப்படும் திகதி: 23 / 04 / 2017**

## Master of Business Administration (MBA)

✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்

Duration: 18 Months Entry Qualification: Any Degree

## Master of Public Administration (MPA)

✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்

Duration: 18 Months Entry Qualification: Any Degree

Contact Persons: Mr.Kanthaiya Sivaraja, Program Co-ordinator, NLIIT, Ph: 0775532402
Dr.Sithambaram Mohan, Human Resource Head, NLIIT, Ph: 0776030507

## B.Sc. in Computer Science

✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்

Duration: 3 Years Entry Qualification: O/L or A/L

## B.Sc. in Computer Science (Top Up)

✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்


Duration: 1 Year Entry Qualification: 2 Years Diploma / HND

## M.Sc. in Computer Science

✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்

Duration: 1 Year Entry Qualification: Any Degree

முழு விவரங்களை பெற கீழ்கண்ட முகவரியை தொடர்பு கொள்ளவும்
North Lanka IIT, Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna. Ph:0767504535



இனிய
தமிழ் புத்தாண்டு
வாழ்த்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ் நொதேண் சென்றல் வைத்தியசாலை

**நவீன தொழில்நுட்பத்துடனான் அனைத்து கண் சத்திர சிகிச்சைகளுக்கும்**

**நொதேண் சென்றல் கண் சிகிச்சை மையம்**
**Northern Central Hospital EYE CARE**









- வடக்கின் முன்னணி கண் சத்திரசிகிச்சை வல்லுனர்களின் ஆலோசனைகள்
- இலவச கண் பரிசோதனைகள் (Vision Testing)
- பார்வைச்சக்திக்குரிய சோதனை (Optical Biometry)
- காலதாமதமின்றிய சத்திரசிகிச்சை முற்பதிவுகள்
- (Cataract) சத்திரசிகிச்சைக்கு வேண்டிய உயர் தர லென்ஸ் மற்றும் அனைத்து பொருட்களும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே இடம்.
- நவீன லேசர் முறையில் மிகக் குறுகிய நேர சத்திரசிகிச்சை சத்திரசிகிச்சையின் பின் வைத்தியரின் ஆலோசனை தவிர விடுதியில் தங்கியிருக்கத் தேவையில்லை.

**வடக்கில் CT Scan மற்றும் MRI சேவைகளை கொண்ட ஒரேயொரு தனியார் வைத்தியசாலை**



**CT என்றால் என்ன?**
Computed Tomography (CT) என்பது உடல் பாகங்கள் மற்றும் இழையங்களின் நுண்ணிய அமைப்புக்களை பல்வேறு கோணங்களில் கதிர்வீச்சினை (X-ray) அனுப்பி அவற்றின் படங்களைக் கணனி மூலம் அவதானிக்கும் ஒரு தொழில் நுட்பமாகும்.



**MRI ஸ்கேன் என்றால் என்ன?**
ஸ்கேன் என்பது வலியில்லாமல் கதிரியக்க அலைகளையும் சக்தி வாய்ந்த காந்தங்களையும் கணனியுடன் தொடர்புபடுத்தி கதிர்வீச்சு பயன்பாடு இல்லாமல் உள்ளுறுப்புகள் மற்றும் திசுக்களை தெளிவாகவும் துல்லியமாகவும் படமெடுக்க பயன்படும் ஒரு நவீன தொழில் நுட்பமாகும்

**Northern Central Hospital**
**342, Palaly Road, Thirunelvely, Jaffna.**
**T.P: 021 221 9988, 021 221 9977, 021 222 2263.**
**Fax: 021 221 6677**
**e-mail:nchjaffna@gmail.com**
**Website: www.nchjaffna.com**

# Sri Ambaal Jewellers

## ஸ்ரீ அம்பாள் ஜீவலர்ஸ்



22 கரட் தங்க நகை வியாபாரம்
TP:- 021 320 5743

**SRI SHAKTHY MADAM**
**ஸ்ரீ சக்தி மாடம்**

கோவில் மற்றும் விசேஷ வைபவங்களுக்கு உரிய பொருட்கள் விற்பனையாளர்.
பிரதான வீதி, நெல்லியடி.

# Nellai Silk



**Main Street,**
**Nelliady.**
**TP:- 021 226 3207**

SEYLAN BANK PLC

# செலான் Seylfie

இளம் உள்ளங்களின் பலம்...

## இளைய தலைமுறையினரின் புரட்சிகரமான கணக்கு

அன்பான வாடிக்கையாளர்களுக்கு என்றும் அன்புடன் அரவணைக்கும் செலான் வங்கி நெல்லியடிக் கிளையின் இனிய தமிழ்ச் சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

**டிஜிட்டல் வட்டி மற்றும் FACE BOOK வங்கிச் சேவை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் புத்தாண்டு சிறப்புமலர் 2017



Lovers Corner

ஆதரவில்

இசைப் பேரரசி

## வாணி ஜெயராமின்

மல்லிகை என்

மன்னன் மயங்கும்

இன்னிசை இரவு

யாழ். மாநகர சபை மைதானம்

5.30 pm - 9.30 pm 16.04.2017



பின்னணி இசை : மெகா ரியூனர்ஸ்

வாணி ஜெயராமுடன் இணைந்து
உங்கள் பாடகர் ரி.எஸ். நாதன்
மற்றும் கலைமாமணி (keyboard)
கோவை நட்ராஜன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

இந்த இசை இரவு நிதியானது கண்டாவளை பிரதேச விதவைகள், குடும்ப பெண்கள் சங்கம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் போன்றோருக்கு இந்த நிதி இசை இரவு மேடையில் வைத்து கையளிக்கப்படவுள்ளது.

அனுமதிச் சீட்டு கிடைக்கும் இடங்கள் NEW LOVERS CORNER BRANCHES

| | |
|---|---|
| No.164,Ramanathan Road, Jaffna. 021 221 9499 | No.4,AlladyJunction, Manipay. 021 225 6444 |
| No.9,Kanagapuram Road, Udayanagar,Kilinochchi. 021 228 5111 | No.12, 1st Floor, Cargills Square, No. 420, Hospital Road, Jaffna. TP- 021222 3020 |

ஊடக அனுசரணை

வலம்புரி

Green Grass

0770716838, 0769388052

Vista8 Printers

# சாரங்காவின்

## தங்க நகை சேமிப்புத் திட்டம்

ஆரம்பம் 29.04.2017

அன்பு நிறைந்த வாடிக்கையாளர்களே!

சிறுக சிறுக சேமிக்கும் பணத்தை தங்கத்தில் முதலிட்டு மனதிற்கு இசைந்த அழகிய வண்ண டிசைன்களில் தங்க நகைகளை அணிந்து மகிழவும் சாரங்கா நகைமாடம் தனது சேமிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றது.

### சேமிப்பு விபரம்

| உங்கள் மாதாந்த கொடுப்பனவு | உங்கள் 12 மாத கொடுப்பனவு | போனஸ் | 13 மாத முடிவில் முதிர்வு கால மொத்தத் தொகை |
|---|---|---|---|
| 2,500/- | 30,000/- | 2,500/- | 32,500/- |
| 5,000/- | 60,000/- | 5,000/- | 65,000/- |

குறிப்பு:- குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுபவர் ஏனைய மாதத்திற்குரிய தவணைக் கட்டணத்தைச் செலுத்தாமலே அதற்குப் பெறுமதியான தங்க நகையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.



*நிபந்தனைகள்*

- ஒருவர் எத்தனை உறுப்புரிமைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.
- தவணைக்கட்டணத்தை ஒழுங்காகக் கட்டமுடியாது விடின் அவர்கள் செலுத்திய பணத்தின் பெறுமதிக்கான நகையை 12 ஆம் மாதத்திற்கு பின்னர் பெற்றுக்கொள்ளலாம்.
- நகைகளின் பெறுமதி அந்தந்த நாளுக்குரிய சந்தைப் பெறுமதியைக் கொண்டதாக இருக்கும்.

157/1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 6972
021 222 8869

## அட்ஷய திருதியை அழைப்பிதழ்

29.04.2017

தினத்தன்று தங்கம் வாங்கும் அனைவருக்கும் தங்கத்தின் பெறுமதிக்கேற்ப பரிசுகள் வழங்கப்படும்.

அனைத்துக் கொள்வனவிற்கும் தரச்சான்றிதழ் வழங்கப்படும்.



# SUN RISE MEDI CLINIC

## சன்றைஸ் மெடி கிளினிக்





- வைத்திய நிபுணர் சேவை
- பொது மருத்துவம்
- என்பு முறிவு நெரிவு
- கண் வைத்தியம்
- காது, மூக்கு, தொண்டை வைத்தியம்
- தோல் சிகிச்சை
- பல் வைத்தியம்
- சத்திரசிகிச்சை
- குழந்தை வைத்தியம்
- நரம்பியல் வைத்தியம்
- பெண் நோயியல்
- கர்ப்பிணிச் சிகிச்சை

டிஜிற்றல் எக்ஸ்றே (Digital Xray) துல்லியமான Xray படங்கள் கணப் பொழுதில் தரும் இயந்திரம் (இலங்கை அணு சக்தி அதிகார சபை அங்கீகாரம் பெற்றது.
ECG- ஈசிஜி
நவீன ஆய்வுகூடம் (Lap)
அல்ற்ரா சவுண்ட்ஸ் ஸ்கானிங் (Ultra Sound Scan)
எக்கோ காடியோகிராம் (ECHO)
நவீன காது துப்புரவு செய்யும் நுணுக்குக்காட்டி (Ear Cleaning·Ent Microscope)
Exeruise Tread Mill Test
(நடைப்பயிற்சி மூலம் இதய அடைப்பு அறியும் கருவி)
(வசதியான வாகனத் தரிப்பிடம் கிளினிக்கின் பின்புறமுள்ளது)

N0. 388, 1st Floor,
Hospital Road, Jaffna.
T.P : 021 222 6069




# YARL BABY NEEDS & PHARMACY

## யாழ்.பேபி நீட்ஸ் அன் பார்மசி

⇨ குழந்தைகளுக்கான
- பருத்தி உடுப்பு பருத்தி நப்கின் சூட் வகைகள் பம்பஸ் வகைகள்
- நவீன டிசைன்களில் உள்ள இறக்குமதி செய்யப்பட்ட (Blanket) பிளாங்கட்
- Baby Towel பேபி டவல் வகைகள்
- யோன்சன் (Johnson) பேபி தயாரிப்புக்கள்
- பார்லின் (Farlin) பேபி தயாரிப்புக்கள்
- வோக்கர் குழந்தைகளுக்கான கட்டில்
- வயதுக்கேற்ப குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள் - அன்பளிப்புப் பொருட்கள்
- பிரசவத் தாய்மாருக்கான அனைத்து பொருட்கள்
- ஆங்கில மருந்து வகைகள்




இல. 388, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே. : 021 222 8013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் புத்தாண்டு சிறப்புமலர் 2017


## STUDY IN CANADA

"Study in Canada... Step up in Life"

TIES

PROGRAMS OFFERED
- INFORMATION TECHNOLOGY
- BUSINESS ADMINISTRATION
- HOTEL MANAGEMENT

# NO IELTS REQUIRED
# Scholarship available
# Work Permit after graduation
# PR options Available

ST.CLAIR COLLEGE, Canada

St.Clair College, Windsor, Ontario

Pathway programs : JOIN IN SRILANKA ! COMPLETE IN CANADA !!

First semester in INDIA March'17, Rest in CANADA September'17

Also available direct study programs

Admission for May and September 2017

ICGE

TIES, 273, Main street, Northern Province, Jaffna, Srilanka

admission@ICGE.education | admission@THIGUVI.com | www.ICGE.education | (+94) 021 45 48464, 021 221 7400

## STUDY IN CANADA — ICGE

www.ICGE.education

Admission for May and September 2017

Niagara College Canada | CONESTOGA Connect Life and Learning | ST.CLAIR COLLEGE, Canada

Why CANADA?
- Work Permit after graduation
- Permanent residency options
- Earn-While -U – Learn options

Courses offered
Diploma, bachelor and post graduate courses

Why ICGE?
- Since 1998 – The oldest and largest counseling organization in the sub continent
- Counselors – Not Agents
- On Spot interview
- Complete Guidance – Admission to graduation, Travel and stay arrangements, change of status

admission@ICGE.education | admission@THIGUVI.com | 273, Main street, Northern Province, Jaffna, Srilanka (+94) 021 45 48464, 021 221 7400 | MDP- Srilanka TIES

## STUDY IN POLAND — ICGE

www.ICGE.education

Admission for May and September 2017

Wszechnica Polska University In Warsaw, Poland is one of the most dynamically developing private Universities in country in terms of didactical base, varied and rich offer of courses, as well as number of students.

Why POLAND?
- No IELTS required
- European Unions valued education system
- Low Academic cost
- Work Permit after graduation
- Immigration opportunities

Courses offered
Diploma, bachelor and post graduate courses
021 221 7400

Why ICGE?
- Since 1998 – The oldest and largest counseling organization in the sub continent
- Counselors – Not Agents
- On Spot interview
- Complete Guidance – Admission to graduation, Travel and stay arrangements, change of status

admission@ICGE.education | admission@THIGUVI.com | 273, Main street, Northern Province, Jaffna, Srilanka (+94) 021 45 48464, 021 221 7400 | MDP- Srilanka TIES

## ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி

Spoken English
Fluency Diploma

ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்

யாழ், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம், கிளிநொச்சி ஆகிய பயிற்சிமையங்களில் புதியபிரிவுகளுக்கு 19-04-2017 ற்கு முன்னர் பதிவுகளைச் செய்து 30% கட்டணக்கழிவினை பெற்றிடுங்கள்.

நேரடியாக ஆங்கிலம் பேசுவதற்கு சிறப்பான பயிற்சிகள்.

30% கட்டணக்கழிவு

கட்டணக்கழிவுடனான கற்கைநெறிக்கு இணைய உள்ள மாணவர்கள் உங்கள் பெயரினை DMI English என Type செய்து 0777 17 35 17 எனும் இலக்கத்திற்கு SMS அனுப்புங்கள்.
< Your Name > DMI English

பயமின்றி ஆங்கிலம் பேச பயில ஒரே சிறந்த தெரிவு

DMI COMPUTER EDUCATION

www.itdmi.com/english

சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்

IELTS # General # Academic

IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு 100% சித்தியடைவதற்கான உத்தரவாதம்
புதிய நடைமுறை சம்மந்தமான தகவல்களை நேரிலோ அல்லது எமது இணையத்தளத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.
www.itdmi.com/lifeskill-tamil.html

DMI COMPUTER EDUCATION

| | | | | |
|---|---|---|---|---|
| No.113, கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) | M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் | No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) |
| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
| Tel.: 021-222 4403 | Tel.: 021-226 2470 | Tel.: 021-227 0775 | Tel.: 021-224 1970 | Tel.: 021-228 5655 |

## AIR COOLER& AIR CONDITIONERS, TV'S

SPECIAL OFFER

எங்குமே இல்லாத விலைக்கழிவில் எம்மிடம்

Telesonic Air Cooler
1 YEAR WARRANTY
16,480/=

12000 BTU
PORTABLE AC
RS: 59,500/=
நீங்கள் விரும்பிய இடங்களிற்கு கொண்டு சென்று பாவிக்க கூடியது. விசேட விலைக்கழிவுடன் Kings Electronics (Pvt) Ltd நிறுவனத்திடம் இருந்து இன்றே வாங்கிச் செல்லுங்கள்

| | |
|---|---|
| Samsung 32" | -29900/= |
| Hisence 32" | -24500/= |
| Sony 40" | -64900/= |
| Hisence 24" | -17900/= |
| Tcl 32" | -21900/= |
| Panasonic 32" | -28500/= |
| Sony 32" | -33600/= |

3 YEARS WARRANTY

Wall Split Mounped AC
With Installation

| Btu | Media | Panasonic |
|---|---|---|
| 9000 BTU | 58,500/= | 79,500/= |
| 12000 BTU | 62,500/= | 86,500/= |
| 18000 BTU | 78,500/= | 109,500/= |

5 YEARS WARRANTY

STAND FAN RS.2900/= ONEYEAR WARRANTY

SONY 48" SMART FULL HD RS.119,900 ONLY

HDMI 3 Years Warranty WiFi YouTube X-Reality

KINGS ELECTRONICS(PVT) LTD

12A, Point Petro Road, Jaffna (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)

021-4546699 | mykings.lk | kingsjaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரைப் புத்தாண்டு சிறப்புமலர் 2017










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல்களில் கோரிக்கைகளை எழுதி தமிழக விவசாயிகள் போராட்டம்



(சென்னை)

டில்லி ஜந்தர் மந்தர் பகுதியில் தமிழக விவசாயிகள் முன்னெடுத்து வரும் போராட்டம் நேற்று முன் தினம் 30வது நாளை எட்டியது.

நாளுக்கு நாள் நூதன போராட்டத்தை முன்னெடுத்து வரும் விவசாயிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை தமது உடல்களில் மையினால் கோரிக்கைகளை எழுதி போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதன்படி 'விவசாயிகளை கொல்லாதே! பயிர் கடன்களை இரத்து செய்து விவசாய பொருட்களுக்கு உரிய விலையை நிர்ணயம் செய்!' போன்ற வாசகங்கள் உடலில் எழுதப்பட்டன.

இந்தப் போராட்டத்துக்கு நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் ஆதரவு தெரிவித்துள்ளதோடு தமிழக அரசியல் கட்சியினர் மட்டுமன்றி வடமாநில அரசியல் கட்சியினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# புத்தாண்டில் தாய்க்கு மகன் கொடுத்த அதிர்ச்சி கம்பளையில் நடந்த சோகம்

கம்பளை பிரதேசத்தில் பெற்ற தாயை நடு வீதியில் விட்டு சென்ற மகன் ஒருவர் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

புத்தாண்டு கொண்டாட்டம் என்பதால், கம்பளை நகரம் மிகவும் மக்கள் நிறைந்து காணப்பட்டுள்ளது. இதனை தனக்கு சாதகமாக பயன்படுத்திய மகன், தாயை அநாதரவாக விட்டுச் சென்றுள்ளார்.

எனினும் பேருந்து நிலையத்தில் தாயை தனியாக விட்டுச் சென்ற நிலையில், கம்பளை பொலிஸ் அதிகாரிகளால் அவர் மீட்கப்பட்டுள்ளார். அவரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

தனது மகனுடன் கம்பளைக்கு வருகை தந்துள்ளதாகவும், தன்னை அங்கு விட்டு சென்று விட்டதாக குறித்த தாய், பொலிஸ் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

தனக்கு மூன்று பிள்ளைகள் உள்ளதாகவும் அவர்கள் அனைவரும் திருமணம் செய்து விட்டனர். ஒரு மகள் கம்பளை பிரதேசத்தில் உள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பொலிஸ் அதிகாரிகள், அவரை சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அழைத்து சென்றனர்.

அவரை சிகிச்சைக்காக அழைத்து செல்லும் போது, அதற்கு எதிர்ப்பு வெளியிட்டவர் தன்னை மீண்டும் காணாமல் ஆக்க செய்ய வேண்டாம் என அது புலம்பினார். (இ-7)

# ஹெரோயினுடன் இளம் பெண் கைது

(கொழும்பு)

கொழும்பு மட்டக்குளி சமித்புர பிரதேசத்தில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இளம் பெண்ணொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண மோசடி தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து இந்த பெண் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் இருந்து 90.1 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

24 வயதான இந்த பெண் மட்டக்குளி பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும், அவர் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மேல் மாகாண மோசடி தடுப்பு பிரிவினர் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சுற்றுலாப் பயணிகள் 6 பேருக்கு குளவி கொட்டு

(கொழும்பு)

நீர்கொழும்பிலிருந்து நுவரெலியாவிற்கு சுற்றுலாவுக்காக சென்று கொண்டிருந்த சுற்றுலா பயணிகள் 6 பேர் நேற்று பிற்பகல் 1 மணியளவில் குளவி கொட்டுக்கு இலக்காகிய நிலையில் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நுவரெலியாவில் நடைபெற்று வரும் வசந்தகால நிகழ்வுகளை கண்டுகளிப்பதற்காக நீர் கொழும்பிலிருந்து சென்று கொண்டிருந்த குறித்த சுற்றுலா பயணிகள் பகல் உணவிற்காக டெவோன் நீர் வீழ்ச்சிக்கு அருகாமையில் சமைத்துக் கொண்டிருக்கும் வேளை அப்பகுதியில் மரத்தில் இருந்த குளவிக் கூடு கலைந்து வந்து இவர்களை இவ்வாறு தாக்கியுள்ளது. (இ-7)

# மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூடு



மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கன்னங்குடா காஞ்சிலங் குடாவில் 34 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தர் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 9 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற க.புனிதநாதன் (வயது 34) என்பவருக்கே இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.ஒரு வருடத்துக்கு முன் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இந்த துப்பாக்கி சூட்டுக்கு காரணம் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.இந்த சம்பவம் தொடர்பாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளனர். (இ-7)

# விபத்து குறித்து எச்சரிக்கை

தமிழ், சிங்கள புத்தாண்டின் போது பட்டாசு போன்ற வெடி பொருட்களை பயன்படுத்துவோர் எச்சரிக்கையுடன் இருக்குமாறு கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர விபத்துப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பற்றவைத்த பின்னர் வெடிக்காத பட்டாசுகளை பிழத்துப் பார்ப்பதை தவிர்த்து கொள்ளுங்கள். வெடிபொருட்களை பயன்படுத்தி விளையாடுவதையும் தவிர்த்து கொள்ளுங்கள். இதனால், கடந்த காலங்களில் பல விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அப்பிரிவின் விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான ஆலோசகர் புஷ்பா டி சொய்ஷா தெரிவித்துள்ளார்.

பட்டாசு வெடிபொருட்கள் போன்று ஏனைய விபத்துக்களிலிருந்தும் முடிந்தவரை கவனமாகவும் எச்சரிக்கையுடனும் இருக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 250 | 120 | 110 | 160 | 120 |
| உருளைக்கிழங்கு | 110 | 140 | 110 | 110 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 100 | 160 | 160 | 120 |
| தக்காளி | 200 | 250 | 140 | 160 | 200 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 100 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 80 | 100 | 50 | 70 | 80 | 80 |
| கரட் | 100 | 200 | 80 | 110 | 200 | 80 |
| பூசணி | 60 | 100 | 40 | 40 | 80 | 60 |
| புடோல் | 100 | 100 | 50 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 100 | 50 | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 180 | 120 | 120 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 100 | 160 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 140 | 200 | 80 | 100 | 120 | 180 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | - | 90 | 120 | 100 |
| பயற்றங்காய் | 180 | 100 | 100 | 160 | 160 | 120 |
| லீக்ஸ் | 70 | 100 | 690 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 100 | 100 | 40 | 100 | 120 | 80 |
| கறிமிளகாய் | 180 | 250 | 140 | 140 | 200 | 150 |
| முருங்கைக்காய் | 500 | 800 | 350 | 400 | 400 | 400 |
| போஞ்சி | 220 | 300 | 140 | 160 | 240 | 160 |
| கத்தரிதம்புள்ள | 140 | 80 | 80 | 80 | 120 | 100 |
| கீரை - 1பிடி | 40 | 50 | 20 | 30 | 50 | 30 |
| தேசிக்காய் | 80 | 50 | 50 | 80 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 100 | 70 | 60 | 50-60 | 70 |
| இராசவள்ளி | 250 | 300 | 160 | 200 | 240 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 200 | - | - | - | - |
| முள்ளங்கி | 60 | 100 | - | 50 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 10 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 | 25 |
| அரப்பலா | - | 100 | - | 60 | 80 | - |

# கௌரவிக்கக்கூடிய அரசியலமைப்பு இல்லாமையே நாடு சீரழிய காரணம்

## தமிழரசுக்கட்சி கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இந்த நாட்டின் பன்மைத்துவத்தினைப் பேணி, மக்கள் அனைவரும் அவர்களை அவர்களே கௌரவிக்கக் கூடிய விதத்திலான அரசியலமைப்பு இல்லாததன் காரணமாக இந்த நாடு மிகவும் சீரழிந்து இருக்கின்றது என இலங்கை தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சி உறுப்பினர்களுடனான விசேட கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது நாட்டில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. காலாகாலத்திற்கு வறுமையினைச் சொல்லிக் கொண்டிருக்கின்ற நாடாகவே இலங்கை இருக்கின்றது.

இங்கிருக்கின்ற வளங்களை, வசதி வாய்ப்புகளை, இங்கிருக்கின்ற பிள்ளைகளை, சொத்துக்களை சரியான முறையில் பயன்படுத்துவதற்கு இன்னும் இலங்கை தயாராக இல்லை.

இப்போது நாங்கள் வடக்கு கிழக்கில் கூட நிம்மதியாக வாழ முடியாத நிலைமையில் இருக்கின்றோம்.

இவற்றையெல்லாம் அரசாங்கம் உணர்ந்து கொள்ள வேண்டும். இவ்வாறு வளமும் பெருமையும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு இனம் இந்த நாட்டிலே சுய கௌரவத்தோடு வாழக் கூடியதான ஏற்பாடு களை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும் என்கின்ற அந்த எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும்.

இந்த செய்தியை வைத்துக் கொண்டு தற்போது இருக்கின்ற இந்த நல்லாட்சியில் இருந்து பெரிய கட்சிகள் சேர்ந்து தமிழர்களுக்கு உரிமையைக் கொடுக்கின்ற ஒரு செயற்பாட்டிற்கு வந்திருக்கின்றது. ஆனால் அதற்குள் மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்கள் சிறு சிறு குழுப் பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.


நம்மவர்களிலும் தலைமையை மாற்ற வேண்டும் என்கின்ற குழப்பத்தினை ஏற்படுத்தியவர்களாக இருக்கின்றார்கள். இவ்வாறான நிலைமையில் தமிழ் மக்களின் உரிமைகள் அங்கீகரிக்கும் வகையிலான அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் இப்போது இருக்கின்ற ஒரு சமாதானமான ஒரு நிலைக்கு வருவோம். எனவே இந்த சமாதான நிலைமையைக் காப்பாற்ற வேண்டியது மக்கள் அனைவரதும் பொறுப்பு என்பதை மறந்து விடக்கூடாது எனத் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரைப் புத்தாண்டு சிறப்புமலர் 2017


# SHARP PHOTO COPIERS



SHARP

AR-6020

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**SHARP நிழற்பிரதி இயந்திரங்கள்**

- ஒரு வருடம் 60000 பிரதிகளுக்கு உத்தரவாதம்
- நிழற்பிரதி/ போட்டோ பிரதி கலர் ஸ்கானிங் வசதிகள்
- இலவச விநியோகம்

125,000/- மட்டுமே!

Brown & Company PLC இன் ஏக முகவர்

DIGITAL ELECTRONICS

62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 077 554 5843/ 021 222 4040

# British College of Beauty Studies




இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலைக்கல்லூரி

ஒளி அழகன் ஸ்டுடியோ

British College of beauty Studies

இணைந்து நடாத்தும் பெண்களுக்குப் பொருத்தமான பாடநெறிகளும் பயிற்சி வகுப்புக்களும்




| அழகுக்கலை Makeups, Hair Styles Ect... | தையற்கலை | சமையற்கலை | கேக் ஐசிங் |
|---|---|---|---|
| | ஆங்கிலம் | சிங்களம் | Fashion and Designing |

Ladies Skills Development

- குறுகிய கால பயிற்சி வகுப்புக்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.
- 5, 6 மாத கால முழு நேர மற்றும் பகுதி நேர வகுப்புக்கள் நடை பெறுகின்றன.
- வெளிநாடு செல்பவர்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி வகுப்புக்களையும் பெற்றுக் கொள்ள முடியும்.
- உள்நாடு, வெளிநாடுகளிலும் சொந்த தொழிலை பெற்றுக்கொள்ளக் கூடிய வளமான பெறுமதி வாய்ந்த சான்றிதழை வழங்கி வருகின்றோம்.

Note : பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மணப்பெண் அலங்காரத்திற்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

Kasthooriyar Road, உதயன் பணிமனைக்கு அருகில். Jaffna.

Thirunelveli Junction, Thirunelveli, Jaffna.


Ph No : 076 701 1645

# MORRIS MOTOR CYCLE WORKS

No: 179, Kandy Road, Jaffna.

BAJAJ

Prop: B.E.Morris
Tel: 077 923 3437



மொறிஸ் மோட்டார் சைக்கிள் வேக்ஸ்

இல : 179, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர் B.E.மொறிஸ்

Service Dealer for David Pieris Motor Company Ltd.

எல்லா மோட்டார் சைக்கிள் குத்தகையுடன் பெறுமதிமிக்க சிங்கர் மின்விசிறி

# இலவசம்




காப்புறுதி இலவசம்

போக்குவரத்து இலவசம்



எந்தவொரு சிங்கர் காட்சியறையிலும் மாதாந்த தவணைக் கொடுப்பனவை செலுத்தலாம்

சிங்கர் உத்தரவாதத்துடன்

SINGER FINANCE

தொடர்புகளுக்கு:

சுஜந்தன் 077 7 391 449

தனு 077 9 357 124

இல.86, கே.கே.எஸ், வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் புத்தாண்டு சிறப்புமலர் 2017



## வீணாகான குருபீடத்தின் புதுவருட நல்லாசிகள்

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் வீணாகான குருபீடம் பெருமையும் மகிழ்வும் அடைகின்றது. பிறந்திருக்கும் புத்தாண்டு அனைவரதும் நல் எண்ணங்களையும் அபிலாசைகளையும் நிறைவேற்றுவதாக அமைவுறட்டும்.

எமது பாரம்பரியங்கள் கட்டிக் காக்கப்படுவதற்கும் வரலாற்றுப் பொக்கிஷங்கள் அழிவுறாமல் இருப்பதற்கும் புதுவருடம் வழி தரட்டும்.

அன்பு,பக்தி, ஒழுக்கம்,விட்டுக்கொடுப்பு, அகிம்சை,கீழ்ப்பணிவு, சகோதரத்துவம் முதலான நற்குணங்களால் அனைவரும் ஒன்றுபட்டு உயர்ந்த வாழ்வு பெறுவதற்கு வழி சமைக்கட்டும்.

காலத்திற்கு காலம் ஏமாற்றப்படுகின்ற தமிழினம் புதுவருடத்தின் வருகையால் ஆவது அரசியல், பொருளாதார நீதிகளால் உயர்வும் சுதந்திரமும் கிடைக்கப் பெறட்டும். தமிழ், சிங்கள புத்தாண்டு வெறுமனே வார்த்தைகளாலும், சொற்களாலும் கொண்டாட்டங்களாலும் ஒன்றுபட்டு இருக்காமல் காத்திரமான முறையில் அனைவருக்கும் சமத்துவமான உரிமைகளும் சுதந்திரமும்,மகிழ்வும், அமைதியும் கிடைக்க புதுவருடம் வழிசமைக்கட்டும்.

புதுவருடம் அனைவருக்கும் எல்லா நலன்களையும் கொடுக்க குருமார் சந்நிதானம் ஆசிர்வதித்து வாழ்த்துகின்றது.

**சந்நிதாச்சாரியார் சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள்**



## ஒழுக்கம் உயரட்டும்

இன்று துர்முகி வருடம் விடைபெற்று புதிய ஹேவிளம்பி வருடம் உதயமாகின்றது. உலகில் பேதங்கள், குழப்பங்கள்,அழிவுகள் எல்லாம் மேலோங்கி மலர்ந்து நிற்கின்றன. பல நாடுகள் பயத்தின் உச்சியில் முணுமுணுத்துக் கொண்டிருக்கின்றன.

ஒரு மனிதன் வாழ்வதற்கும் ஒரு நாடு வாழ்வதற்கும் ஒழுக்கமே உயர்ந்ததாகும். ஒவ்வொரு மனிதனும் ஜீவகாருண்யத்துடன் ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் இயற்கை மனிதனுக்குக் கொடுத்துள்ள அத்தனை உயர் மெய்ஞ்ஞான பதவிகளையும் அனுபவித்து அதில் வரும் அனைத்து சுகங்களின் வெற்றி தருகிற சுந்தர சுகமாய் வாழ வேண்டும்.

அனைவருக்கும் எனது சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகின்றேன்.

"சர்வே ஜனகா சுகினோ பவந்து"
'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

**தமிழ் முகில்**
**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P.**
**இந்துமத குரு பீடாதிபதி,**
**பிரதமகுரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில், வல்வெட்டித்துறை.**

## இந்து மக்களின் உணர்வுகளை அறிந்து நடவடிக்கை எடுங்கள்
## அகில இலங்கை இந்து மாமன்றத்தின் புத்தாண்டுச் செய்தி

இந்நாட்டில் ஜனநாயக ஆட்சியை நிறுவும் போராட்டத்தில், ஜனவரி 2015 இல் இந்த நாட்டின் சர்வாதிகார போக்கற்ற ஓர் ஆட்சியை நிறுவ இணைந்து கொண்ட தமிழ் மக்கள், **இன்று, இராணுவ – பௌத்த அரசியல் இந்த நாட்டில் அதே ஆட்சியால் ஊக்குவிக்கப்படுவதுடன் மேலும் வளர்க்கப்படுகின்றது என்பதைக் கண்டு ஏமாற்றமடைந்துள்ளனர். அதுவும், நல்லாட்சிக் குரல்** கொடுத்து எங்களது மக்களின் பேராதரவைப் பெற்றவர்கள் அந்தக் கொடுமையில் ஈடுபட்டிருப்பது இன்னும் ஏமாற்றத்தை அளிக்கின்றது.

இந்த துரதிர்ஷ்டவசமான போக்கு, தமிழ் மக்களுக்கு தங்கள் நாட்டில் இருக்க வேண்டிய அரசியல் ஜனநாயக உரிமைகளில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். **இந்த நிலைமை மேலும் தொடராமல் நிறுத்தப்படாவிட்டால் இன்னும் ஏமாற்றமும் பாரதூரமான மோதல் நிலையும் ஏற்படும்.** கடந்த அரசின் காலத்தில் ஆயிரக் கணக்கான ஏக்கர் காணி ஆயுதப்படைகளின் வசம் இருந்ததாக அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. இராணுவத்தால் அங்கீகாரமின்றி சுவீகரிக்கப்பட்ட காணிகளை உரிமையாளர்களுக்கு திருப்பிக் கொடுப்போம் என்ற உறுதிமொழியை புதிய ஆட்சியாளர்கள் நிறைவேற்றவில்லை. இதுவரை அத்தகைய காணிகளில் சிறு விகிதமே விடுவிக்கப்பட்டுள்ளது. மக்களின் போராட்டம் வேண்டுகோள்களை உதாசீனம் செய்து **கோப்பாப்பிலவு** மக்களின் 482 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளில் இன்னும் இராணுவம் நிலை கொண்டிருப்பது இன்னும் ஒரு **வேதனை** தரும் செய்தி.

ஆயுதப்படைகளால் மட்டுமல்லாது **தொல்பொருள் ஆராய்ச்சித்** திணைக்களம்கூட அரசின் அங்கமாக எங்கள் மக்களின் உரிமைகளை நசுக்க முற்படுவது துரதிர்ஷ்டவசமாகும்.

**இந்த சூழ்நிலையில்தான் புதுவருடம் பிறக்கின்றது.** இணக்கப்பாடும் மீள்புனருத்தாரணமும் பற்றிக் கதைக்கப்பட்டாலும் போதிய – திருப்திகரமான எந்த நடவடிக்கையும் அவ்வழியில் அரசாங்கத்தாலும் அரச நிறுவனங்களாலும் எடுக்கப்படவில்லை.

தேசிய ஒருமைப்பாடு பற்றி, இணக்கப்பாடு பற்றியெல்லாம் கதைப்பதற்கு முன் எங்கள் மக்கள் **தங்கள் சுதந்திரத்தையே முதலில் நாடி நிற்கின்றனர்.** இது அரசாங்கத்திற்குப் புரியாத விடயம் அல்ல. ஆனால் அடுத்து அடுத்து இந்த நாட்டை ஆளவந்தவர்கள் புரிந்தாலும் புரியாத மாதிரியே நடிப்பதுதான் வேதனை.

**நாட்டின் சகல பகுதிகளிலும் வாழும் இந்து மக்களின் உணர்வுகள் இவை.** எனவே அவர்களின் அபிலாசைகளை மெச்சி அவர்களுக்குரிய நிவாரணங்களை வழங்குமாறு ஒவ்வொருவரையும் வேண்டுகிறோம். அது நடக்காவிட்டால் புதுவருடத்தினை அவர்கள் கொண்டாடுவதை எதிர்பார்க்க முடியாது.

அதே சமயம் இந்த நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற இந்து மக்களிடம் நாம் விடுக்கும் வேண்டுகோள், அவர்கள் எல்லோரையும் பிரார்த்தனையிலீடுபடுமாறும், அவர்கள் பல ஆண்டுகளாக எதிர்பார்க்கும் பிரச்சினைகள் தீர இறையருள் கிடைக்கும் எனவும் எல்லாம்வல்ல பரம்பொருளைப் பிரார்த்திப்போம்.

**இறைபணியில்**
**அகில இலங்கை இந்து மாமன்றம்**



## செஞ்சொற்செல்வரின் புத்தாண்டு ஆசிச்செய்தி

இறையருளை வேண்டிய வண்ணம் புதிய ஆண்டை வரவேற்போம். புதிய ஆண்டில் நல்ல காரியங்கள் செய்ய வேண்டும் என எண்ணுவோம். மனித வாழ்வு எமக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பம். இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி நாமும் வாழ்ந்து பிறரையும் நல்ல வண்ணம் வாழவைப்போம். காலம் மிகவும் பெறுமதியானது. கடந்த காலங்களில் நாம் நிறைவேற்றிய நல்ல விடயங்கள் குறித்து திருப்தியடைவோம். கடந்த காலங்களில் நாம் விட்ட தவறுகள் இப்புதிய ஆண்டிலும் ஏற்படாத வகையில் நல்ல வண்ணம் திட்டமிடுவோம். கடந்து செல்லும் ஆண்டில் நாம் விட்ட தவறுகளுக்காக கடவுளை மன்றாடுவோம். பகைமையை வளர்ப்பதால் பயன் இல்லை என்பதை உணர்வோம். இயன்றவரை கோபத்தை அடக்கப் பழகுவோம். அனைவரையும் அன்பால் அரவணைப்போம். ஆன்மீக பலத்திற்கு ஈடாக வேறொன்றும் இல்லை என்பதை உணர்வோம். தெய்வமே எமக்குத் துணை என்ற உண்மையை நாமும் உணர்ந்து பிறருக்கும் எடுத்துரைப்போம்.

ஹேவிளம்பி என்ற நாமத்தோடு பிறக்கும் புதுவருடமே ஏதிலிகளாக அலையும் மக்களுக்கு விடிவுகொடுப்பாயாக! படித்துப் பட்டம் பெற்று விட்டு வேலையின்றி அலையும் தலைமுறைக்கு விடிவு கொடுப்பாயாக! காலஎல்லையின்றி கடும் சிறையில் வாடும் மக்களுக்கு விடிவு தருவாயாக! தினமும் அஞ்சி அஞ்சி அவல நோய்களினால் துடிக்கும் அப்பாவிகளுக்கு ஆறுதல் தருவாயாக! ஏழ்மையால் வருந்தி ஏக்கத்தோடு வாழும் பாட்டாளிகளுக்கு விமோசனம் தருவாயாக! என அகம் திறந்து ஆண்டவரை அனைவரும் இந்நாளில் மன்றாடுவோமாக!

வருடம் பிறக்கும்வேளை நல்வாழ்வு கேட்டு அனைவரும் திருக்கோயில் வாசல்களுக்கு செல்லுங்கள். தெய்வத் திருவருளால் நாம் நலமாக வாழ வேண்டும் எனப் பிரார்த்தியுங்கள். வீட்டு முற்றத்தில் புதுவருட நாளில் பொங்கிப் படையுங்கள். வேளாவேளை உணவுதந்த தெய்வங்களைப் போற்றுங்கள். மூத்தோரை நாடிச் சென்று ஆசிபெறுங்கள். பிறருக்கு கைவிசேடம் கொடுத்து நட்புக் கரங்களைப் பற்றுங்கள். ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற உண்மைத் தத்துவத்தை உணருங்கள். சாதிக்கப் பிறந்த நாம் சோம்பலில் உளராமல் புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்று ஆயத்தம் செய்யுங்கள். மகத்தான மனித வாழ்வை மாசற்ற வாழ்வாக தொடர எனது இதய பூர்வமான புத்தாண்டு நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் சமர்ப்பித்து அமைகிறேன்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்.**
**தலைவர்.ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.**
**தலைவர். சிவபூமி அறக்கட்டளை.**
**உபதலைவர்.அகில இலங்கை இந்துமாமன்றம்.**




## புத்தாண்டு வாழ்த்து



எங்கும் ஆனந்தமும் அமைதியும் மலர்ந்து மனநிறைவோடு அனவரும் வாழ இப் புத்தாண்டு தினத்தில் எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீமத் நடராஜப் பெருமானைப் பிரார்த்திப்போமாக.

நீண்ட நெடுங்காலமாக ஏற்பட்ட போராட்டச் சூழ்நிலையால் மனம் வெதும்பி வாழும் எமது மக்களின் தியாகங்கள் அர்த்தமுள்ளதாக அமையட்டும்.

தற்போது ஏற்பட்டுள்ள சர்வதேச அரசியற் சூழ்நிலையில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் கனதிமிக்கதாக கணிக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டின் பெரும்பான்மைச் சமூகம் இதனை நன்குணர்ந்து செயற்படுவது அவசியமாகிறது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட பல்வேறு கசப்பான அனுபவங்கள் மீண்டும் இந்நாட்டில் நிகழாதிருப்பதற்கான ஆக்கபூர்வமான திட்டங்களை பௌத்த பீடங்கள் மக்களுக்கும் அரசுக்கும் முன் வைக்கும் மனோபலத்தை இறைவன் அவர்களுக்கு வழங்க வேண்டும் என இறைஞ்சுகின்றோம்.

சொல்லொணாத் துன்பத்தில் வாழும் தமிழ் மக்களின் நலன்களை பேணும் ஆக்கபூர்வமான திட்டங்களை காலம் தாழ்த்தாது நிறைவேற்றி தமிழ் மக்களின் மனங்களை வெல்ல துரிதமான, கூர்மையான சிந்தனைகளை இறைவன் அரசுக்கு வழங்க வேண்டும். இப்புனித ஆண்டில் அனைவரும் மகிழ்வுடன் குதூகலித்து வாழ எல்லாம் வல்ல ஆடல் வல்லானை மீண்டும் பிரார்த்திக்கின்றேன்.

**சி.சக்திகிரீவன் செயலாளர்,**
**இந்து சமயப் பேரவை யாழ்ப்பாணம்.**



## யாழ். ஆயர் புத்தாண்டு- ஈஸ்ரர் வாழ்த்துச் செய்தி 2017

அரசு ஏற்கனவே ஆற்றியுள்ள நல்ல செயல்களுக்கு தமிழ் மக்கள் பெயரால் நன்றி தெரிவிக்கும் வேளை உண்மையை மூடி மறைக்கும் நோக்கிலோ அல்லது அரசியல் இலாபம் கருதியோ காலத்தை இன்னும் இழுத்தடிக்காமல் விரைவாக செயற்படுங்கள் என வேண்டுகிறோம்.

2017ஆம் ஆண்டிற்குரிய தமிழ் - சிங்கள புத்தாண்டை கொண்டாடும் அன்பர்கள் அனைவர்க்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை முதலில் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். புதிய ஆண்டில் நீங்கள் அனைவரும் இறை அருளை முழுமையாகப் பெற்று உங்கள் உள்ளத்து எண்ணங்கள் அனைத்தும் நிறையப் பெற்று நன்மனது கொண்ட மனிதர்களாக வாழுங்கள் என வாழ்த்துகிறோம்.

உலகெங்கும் பரந்து வாழும் கிறிஸ்தவ மக்கள் கொண்டாடும் விழாக்களிலே அதி உன்னதமான விழா ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழாவாகும். ஆண்டவர் இயேசுவின் பாடுகள்,மரணம் ஆகிய நிலைகளைக் கடந்து அவரின் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் இனிய உயிர்ப்பு விழா வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

இயேசு இறந்த மூன்றாம் நாள் கல்லறைக்கு வந்து வெற்றுக் கல்லறையைக் காணும் வரை "இயேசு இறந்து உயர்த்தெழ வேண்டும் என்னும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்து கொள்ளவில்லை" என்கிறார் யோவான் நற்செய்தியாளர் (யோவான் 20:9) இயேசு இறந்து உயிர்த்து விட்டார். அவர் இன்று எம்முடன் உயிர் வாழுகிறார் என்ற உண்மையை அனுபவ ரீதியாக நாம் புரிந்து கொள்ள வேண்டும். அந்த அனுபவத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதுவே உயிர்ப்பு விழா தரும் செய்தியாகும்.

இலங்கையின் அப்போஸ்தலர் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் ஆண்டில் யாழ்.மறை மாவட்ட யாத்திரைத்தலத்தை அவருக்கு புகலிடம் கொடுத்து பாதுகாத்து சரித்திரத்தில் இடம் பிடித்த சில்லாலைப் பங்கில் அமைக்கும் பணி ஒரு முக்கிய பணியாகும். புனித யோசவ்வாஸ் அடிகளார் தனது 59 வருட இவ்வுலக வாழ்வில் 35வருட குருத்துவப் பணியை புரிந்து அதில் 24 ஆண்டுகள் இலங்கை மண்ணில் பணியாற்றியுள்ளார். தனி மனிதனாக வசதிகளும் வாய்ப்புக்களும் இல்லாத ஒரு காலத்தில் கால்நடையாக இலங்கை முழுவதும் பயணித்து தமிழ் மக்கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் பணியாற்றியவர். இலங்கையின் கலாசார பண்பாட்டை மதித்து பண்பாட்டு மயமாக்கலை மேற்கொண்டு - இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து இலங்கை மக்கள் சத்தியவேத விசுவாசத்தில் வளர வேண்டும் என்பதில் கவனம் கொண்டு பணியாற்றியவர். இலங்கையின் அப்போஸ்தலர் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் ஆண்டு யாழ். மறை மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்பட அனைவரும் உழைக்க வேண்டும்.

மூன்று தசாப்த கால போர் முடிந்து பல ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் நல்லெண்ண அரசு பல விடயங்களை இன்னும் மிக வேகமாக ஆற்றி இயல்பு வாழ்வை வரைவிற் தோற்றுவிக்க வேண்டும் என்பதே தமிழ்.மக்கள் அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

சொந்த நிலங்கள் விடுவிப்பு - இடம் பெயர்ந்தோரின் மீள்குடியேற்றம்
- வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் - அரசியற் கைதிகள் விடுதலை
- முன்னாள் போராளிகளின் முழுமையான விடுதலையும் புனர்வாழ்வும்
- காணாமற் போனோர் விவகாரம் - நீதியான போர்க்குற்ற விசாரணை
- அரசியல் யாப்பு மற்றும் புதிய அரசமைப்பு உருவாக்கம் என பல பிரச்சினைகளுக்கு வேகமாகவும் விவேகமாகவும் தீர்வு காணப்பட வேண்டி உள்ளன.

இவை தொடர்பான சுமுக நடவடிக்கைகள் நடைபெறாமையால் இன்று பல இடங்களிலும் பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இப்போராட்டங்கள் நீண்ட நாட்கள் எடுத்து மக்களை இன்னும் வேதனைப்படுத்தாமலும் மக்கள் விரக்தியுற்று வேறு முடிவுகளுக்குப் போகாமலும் இருக்கத்தக்க விதமாக அரசு வேகமாகச் செயற்பட்டு முடிவுகளைக் காண வேண்டுமென அன்பு வேண்டுகோள் விடுக்கிறோம். அரசு ஏற்கனவே ஆற்றியுள்ள நல்ல செயல்களுக்கு தமிழ் மக்கள் பெயரால் நன்றி தெரிவிக்கும் வேளை உண்மையை மூடி மறைக்கும் நோக்கிலோ அல்லது அரசியல் இலாபம் கருதியோ காலத்தை இன்னும் இழுத்தடிக்காமல் விரைவாக செயற்படுங்கள் என வேண்டுகிறோம்.

இந்த மக்கள் தரமுடியாத எதையும் கேட்கவில்லை. வேறு யாருக்கோ உரிய எதையும் கேட்கவில்லை. புதிதாக எதையும் கேட்கவில்லை. தமது சொந்த மண்ணைக் கேட்கிறார்கள். தமது சொந்த பாரம்பரியத்தைக் கேட்கிறார்கள். தமது மிக அடிப்படையான விடயங்களையே கேட்கிறார்கள். இதனைக்கூட போராடித்தான் பெற வேண்டும் என்ற ஒரு நிலையை அரசு உருவாக்குவது எந்த வகையில் நியாயம். 30 ஆண்டுகளாக ஒரு கொடிய போரின் பயங்கர அனுபவங்களில் வாழ்ந்தவர்கள் இந்த மக்கள். போர் முடிந்து எட்டு ஆண்டுகளாகியும் இன்னும் ஒரு ஆறுதலின் நம்பிக்கைப் பெருமூச்சை முழுமையாக விட முடியாமல் உள்ளனர்.

நல்லெண்ண அரசு இந்த அடிப்படை வசதிகளை மக்கள் கேட்காமலே நேரகாலத்தோடு செய்து கொடுத்திருக்க வேண்டும். தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தி இரு இனங்களும் இனி இந்த நாட்டில் இணைந்தே வாழவேண்டும் என்ற சமாதான சமிக்ஞையைக் காட்டி இருக்க வேண்டும். இவ்வளவு காலம் தாழ்த்தியும் மக்கள் இவ்வளவு போராட்டம் நடத்தியும் இனியும் வேகமாக செயற்பட்டு இயல்பு வாழ்வை ஏற்படுத்தாது இருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது.

மக்கள் இனியும் போராட்டம் என்ற பெயரில் துன்பத்தையும் வேதனையையும் அனுபவிக்க அனுமதிக்காதீர்கள். அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்குமுன் உடனடியாக இயல்பு வாழ்வை முழுமையாக ஏற்படுத்துங்கள். மக்கள் குடியிருப்புக்களில் இருந்து இராணுவத்தை முழுமையாக அகற்றுங்கள். அவர்களுக்கு அரச காணிகள் நிறையவே உண்டு. போராட்டம் முடிந்தமையால் அவர்கள் தள்ளி இருப்பதே சிறந்தது.

காணாமற் போனோர் என்ற விடயத்திற்கு முழுமையான முடிவு காணுங்கள். உண்மையை வெளிக்கொணர்ந்து மக்கள் ஏற்கும் விதமாக அறியப்படுத்துங்கள். தமிழ் மக்களின் ஒவ்வொரு வீட்டிலும் யாரோ ஒருவர் இறந்தே உள்ளார். அவர்கள் எந்த முடிவையும் தற்போது ஏற்கும் மனநிலையிலேயே உள்ளனர். இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியாது. அதேவேளை உயிரோடு இருப்பவர்களை காலம் காலமாக மறைத்தே வைத்திருக்க முடியாது. எல்லா பிரச்சினைகளுக்கும் ஒரு முடிவு உண்டு. மனித உயிர் சம்பந்தமான இப்பிரச்சினைக்கு இனியும் காலம் தாழ்த்தாது முடிவு காணுங்கள்.

இருப்பவர்களை உடன் விடுவியுங்கள். இல்லாதவர்கள் பற்றிய பிரச்சினையை தெளிவுபடுத்தி சமயக் கடமைகளை நிறைவேற்றி இறந்தவர்கள் இளைப்பாறவும் உறவுகள் தம் மனசுகளை ஆறுதற்படுத்தவும் வழி செய்யுங்கள். இறந்தவர்களுக்கான இறப்பு சான்றிதழைப் பெறவும் இழப்பீடு பெறவும் வழி செய்யுங்கள். காணாமற் போனோரின் உறவுகள் அனுபவிக்கும் முடிவில்லாச் சோகத்திற்கும் மன அங்கலாய்ப்பிற்கும் முடிவு கொண்டு வாருங்கள். எமக்கிடையே என்ன வேறுபாடுகள் இருந்தாலும் இலங்கை வாழ் மக்கள் என்ற நிலையில் இலங்கை மண்ணின் மைந்தர்கள் என்ற உறவு எம்மை எப்போதும் இணைத்துக் கொண்டே இருக்கவும் இனங்களையும் மதங்களையும் தாண்டி இலங்கை மண்ணின் மைந்தர்கள் என்ற பாலம் எம்மைப் பலப்படுத்திக் கொண்டே இருக்கவும் வழி செய்யுங்கள்.

இறையாசீர் என்றும் உங்களோடு இருந்து வழிநடத்துவதாக.

**மேதகு கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை. யாழ்-ஆயர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 கோடியே 49 இலட்சத்து 59 ஆயிரம் ரூபா

# 8 ஆயிரத்து 71 விவசாயிகளின் பயிரழிவிற்கு இழப்பீட்டுக் கொடுப்பனவாக பகிர்ந்தளிப்பு

## கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தகவல் படி

(மல்லாவி )

அரசாங்கத்தினால், மத்திய விவசாய அமைச்சின் கீழுள்ள கைத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் ஊடாகவும் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒத்துழைப்புடனும், கடந்த 2016 - 2017, ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையை மேற்கொண்ட நிலையில், வரட்சியினால் பயிரழிவிற்குட்பட்ட விவசாயிகளின் நலன் கருதி, 4 மாதங்களிற்கு தலா 10 ஆயிரம் ரூபா வழங்கும் திட்டத்திற்கு அமைவாக தமிழ் / சிங்கள புத்தாண்டுப் பிறப்பை முன்னிட்டு முதல் கட்டமாக விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக்கத்திற்கு காப்புறுதிப் பணமாக ஆயிரத்து 350 ரூபாவைக் கழித்து மீதிப் பணமாக 8 ஆயிரத்து 650 ரூபா விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு வரவிடப்பட்டுள்ளதாக மத்திய விவசாய அமைச்சின் கீழ் உள்ள கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட 8 கமநல சேவை நிலையங்களின் கீழ் காலபோக நெற்செய்கையை மேற்கொண்ட நிலையில் வரட்சியினால் பயிரழிவிற்குட்பட்ட 8 ஆயிரத்து 71 விவசா யிகளின் 24 ஆயிரத்து 757. 75, ஏக்கர் பயிரழிவிற்கு மொத்தம் 21, கோடியே 49, இலட்சத்து 59, ஆயிரத்து 500, ரூபா பணம் இழப்பீட்டுக் கொடுப்பனவை விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக்கத்திற்கு வரவிடப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் அலுவலக தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள ஆயிரத்து 739 விவசாயிகளின் 6238.5, ஏக்கர் நெற்பயிரழிவிற்கு 06, கோடியே 23 இலட்சத்து 18, ஆயிரம் ரூபாவும்,

இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள ஆயிரத்து 214, விவசாயிகளின் 2854.25 ஏக்கர் நெற்பயிரழிவிற்கு 02, கோடியே 52, இலட்சத்து 50, ஆயிரத்து 500, ரூபாவும்,

புளியம் பொக்கணை கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள ஆயிரத்து 338, விவசாயிகளின் 4708.75, ஏக்கர் பயிரழிவிற்கு 4, கோடியே 70, இலட்சத்து 79, ஆயிரத்து 500, ரூபாவும்,

அக்கராயன்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள 263, விவசாயிகளின் 696.5, ஏக்கர் நெற்பயிரழிவிற்கு 68, இலட்சத்து ஆயிரம் ரூபாவும், பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

முழங்காவில் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள 627 விவசாயிகளின் ஆயிரத்து 215, ஏக்கர் நெற்செய்கையின் பயிரழிவிற்கு ஒரு கோடியே 21, இலட்சத்து 42, ஆயிரம் ரூபாவும்,

பூநகரி கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள 2 ஆயிரத்து 094, விவசாயிகளின் 7318, ஏக்கர் நெற்பயிரழிவிற்கு 04, கோடியே 41, இலட்சத்து 06, ஆயிரம் ரூபாவும்,

பளை கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள 458, விவசாயிகளின் 796.75, ஏக்கர் நெற்பயிரழிவிற்கு 79 இலட்சத்து 66 ஆயிரத்து 500 ரூபாவும்,

உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள 438 விவசாயிகளின் 930, ஏக்கர் நெற்பயிரழிவிற்கு 92, இலட்சத்து 96, ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 8071, விவசாயிகளின் 24757.75 ஏக்கர் நெற்பயிரழிவிற்கு 21 கோடியே 49, இலட்சத்து 59, ஆயிரத்து 500, ரூபா பணம் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப் படுகின்றது.

இந்த கொடுப்பனவுகள் விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கு உள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஆகிய வங்கிகளின் கணக்கு இலக்கங்கள் ஊடாக கடந்த 12ஆம் திகதி புதன் கிழமை முதல் வழங்கப் பட்டு வருகின்றது.

இதேவேளை கடந்த 2016 - 2017, ஆம் ஆண்டு காலபோக நெறசெய்கையை மேற் கொள்ளத் தவறியவர்களுக்கும் மற்றும் கடந்த காலபோகத்தின் போது மேட்டு நிலப் பயிர்ச் செய்கையாக மரக்கறி செய்கை, பழச் செய்கை, உட்பட தானியப் பயிர் செய்கையை மேற்கொண்ட நிலையில் வரட்சியினால் பயிரழிவிற்குட்பட்ட விவசாயிகளுக்கும், வரட்சி கொடுப்பனவாக 10ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இவர்கள் தொடர்பான விபரங்களை கமநல சேவை நிலையங்களின் ஊடாக திரட்டப்பட்டுள்ளதாகவும்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் அலுவலகத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-15)




## பயிற்சிநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது



மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாட்டிற்கான தேசிய சங்கத்தால் (நாறோர்) போட்டஸ் நிறுவன நிதியனுசரணையில் முகமாலையில் பெண்களுக்கான ஆறு மாத காலப்பயிற்சி இடம்பெற்றது.

இதனடிப்படையில் இப் பயிற்சியை பூர்த்தி செய்தவர்களுக்கான தையல் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வானது நேற்று முன்தினம் முகமாலைபொதுநோக்கு மண்டபத்தில் நாறோ நிறுவனத்தலைவரும் கல்வி பண்பாட்டலுவல்கள்அமைச்சருமான த.குருகுலராசா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக போட்டஸ் நிறுவன செயலாளர் ம.சாந்தமூர்த்தி, சிறப்பு விருந்தினராக கரைச்சி பிரதேச சபை செயலாளர் க.கம்பநாதன், கிளிநொச்சி வலய ஓய்வு நிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் கி.சின்னராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது தலைமைஉரையாற்றியதகுருகுலராஜா தனது உரையில் மக்களே நடமாட்டமே இல்லாத காணி வெடி நிறைந்த இப்பிரதேசம் இறுதியாக கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட இப் பிரதேசத்தில் இப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்மூவதற்காக இம் மண்டபத்தில் ஆறுமாதகாலப் பயிற்சி வழங்கப்பட்டு தொழில் திறமை பெற்றவர்களாக்கப்பட்டு இன்று உங்கள் கைத்திறனைக் காட்டும் கண்காட்சி நடத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்படுகிறது. இதன் மூலம் தொழில் வாய்ப்பை பெற்று உங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். கண்காட்சியில் வைக்கப்பட்ட ஆடைகள் விற்பனையும் செய்யப்பட்டது. (2-5-84)

## கிளிநொச்சியில் புகையிரதக்கடவை சமிக்ஞைகளில் தொழில்நுட்ப கோளாறு

### - சாரதிகள் குழப்பம் -

கிளிநொச்சியில் உள்ள பல புகையிரதக் கடவைகளில் சமிக்ஞை விளக்குகளில் ஏற்பட்ட தொழில்நுட்க் கோளாறினால் சில மணித்தியாலயங்களாக தொடர்ந்து சிவப்பு நிற சமிக்ஞை விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருப்பதாகவும் இதனால் குறித்த கடவைகளைக் கடக்கும் சாரதிகள் பல நிமிடங்கள் காத்திருந்து இது தவறான சமிக்ஞையை தருகிறது என உணர்ந்ததன் பின்னரே குழம்பிய நிலையில் கடவையைக் கடக்கின்றனர் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் புகையிரதம் வருகிறதா இல்லை தவறான சமிக்ஞையா என உறுதி செய்யப்பட்டதன் பின்னரே பாதுகாப்புக் கடவைகளை அவதானமாக கடக்கவேண்டிய நிலைக்கு சாரதிகள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

கிளிநொச்சியில் இருக்கின்ற பல புகையிரதக் கடவைகளினூடாக நாள் ஒன்றிற்கு பல ஆயிரக்கணக்கான வாகனங்களும் பாதசாரிகளும் தமது போக்குவரத்தை மேற்கொள்கின்றனர். அத்துடன் கிளிநொச்சியில் புகையிரதக் கடவைகள் சீரின்மையால் பல விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் உயிர்ச்சேதங்களும் இடம்பெற்றுள்ளன.

எனவே இவற்றை எல்லாம் கருத்திற்கொண்டு மிக விரைவில் இந்த தொழில்நுட்ப கோளாறுகளை சரி செய்து தருமாறு சாரதிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-5-312)



கோம்பாவில் இரண்டாம் வட்டாரத்தில் உள்ள தளிர் முன்பள்ளியின் 2017ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப்போட்டியானது கடந்த வாரம் நடைபெற்றது. வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் விருந்தினராக கலந்துகொண்டு சிறாருகளுக்கு பரிசில்களை வழங்கி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி விலகுவது எனக்கு புதிதல்ல

## இரா. சம்பந்தன் கூறுகிறார்



(கொழும்பு)

மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பதவி விலகுவது என்பது தனக்கு புதிய விடயமல்ல எனவும் அது பழைய விடயம் ஆகும் எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கு முன்னரும் மக்களின் உரிமைகளுக்காக பதவி விலகும் சூழல் வந்த போது முதலில் பதவி விலகியவன் தான் என இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போது தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை காண்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்வதற்காக பக்குவமாக செயற்படவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது எனவும் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இதேவேளை காணிகளை இழந்துள்ள மக்களின் உணர்வுகளை புரிந்து கொள்ள வேண்டும் என குறிப்பிட்டுள்ள அவர், அவற்றை உதாசீனம் செய்யக்கூடாது எனவும் தெரிவித்தார்.

தாம் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாகவும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமக்கு உரிய தீர்வை பெற்றுத்தர முடியாவிட்டால் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உட்பட அனைத்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அரசியல் தலைவர்களும் தங்களின் பதவிகளை துறந்து விட்டு எம்மோடு வீதியில் இருந்து போராடவர வேண்டும் என கேப்பாப்புலவு பூர்வீக கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதற்கே எதிர்க் கட்சி தலைவர் இவ்வாறு பதில் வழங்கியுள்ளார். (இ-7)

# மாமியார் கொடுமை;தமிழகத்திற்கு தப்பிச் சென்ற இலங்கைப் பெண்

(சென்னை)

மாமியார் கொடுமை காரணமாக இலங்கையிலிருந்து தமிழ்ப் பெண் ஒருவர் தன் குழந்தைகளுடன் படகு மூலம் தமிழகத்திற்கு வந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொழும்பு, ராஜகிரிய பகுதியை சேர்ந்த பெண் ஒருவரே தனது மூன்று குழந்தைகளுடன் இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெண்ணின் கணவர் வெளிநாட்டில் தொழில் செய்து வரும் நிலையில், குறித்த பெண்ணை அவரது மாமியார் கொடுமைப்படுத்தியுள்ளார். இதனால் மாமியார் கொடுமையிலிருந்து மீள்வதற்காக குறித்த பெண் ராமேஸ்வரத்தை சென்றடைந்துள்ளார்.

தூத்துக்குடி அருகே உள்ள மணியாச்சியில் வசித்து வரும் தன் பெற்றோருடன் சேர்ந்து வாழும் நோக்கில் நேற்று முன்தினம் இரவு படகு மூலம் அந்த பெண் தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

படகோட்டிகள் இவர்களை அரிச்சல் முனை பகுதியில் உள்ள மணல் திட்டில் நள்ளிரவில் இறக்கிவிட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் மணல் திட்டில் சிக்கி தவித்த குறித்த பெண் உள்ளிட்ட குழந்தைகளை கடலோர பாதுகாப்பு பொலிஸார் மீட்டுள்ளனர். அவர்களிடம் தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

# கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட நபர் நொச்சியாகம பகுதியில் கைது

(கொழும்பு)

இபலோகம பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட நபர் குற்றவியல்விசாரணைகள்திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நொச்சியாகமை பிரதேசத்தில் வைத்து அஜன்த்த புஷ்பகுமார எனும் குறித்த நபர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி குறித்த நபர் கடத்தப்பட்டதாக அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும், குறித்த நபர் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கண்டறியப்பட்டுள்ளது. (இ-7)

# விபத்தில் இரு இளைஞர்கள் பலி

மாலபே - கடுவலை வீதியின் வெலிவிட்ட சந்திப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்தனர்.

மோட்டார் சைக்கிள் ஒன்றும் டிப்பர் வாகனம் ஒன்றும் மோதுண்டதில் இவ்விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 19 மற்றும் 28 வயதுடைய இரு இளைஞர்களும் காயமடைந்து ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கும் போதே உயிரிழந்துள்ளனர்.

டிப்பர் வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், தலங்கம் பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1043

Search for people, places and things Nagendram Home

### நிலா




### சர்மிளா

பசித்த வயிறு...!
பணமில்லா வாழ்க்கை...!
பொய்யான உறவுகள்...!
இவை மூன்றும் ஒரு மனிதனுக்கு கற்றுக் கொடுக்கும் பாடத்தை எவனொருவனாலும் கற்றுக் கொடுக்க முடியாது.

### கண்ணன்




### மதி




### ரதி




### கேசா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாவின் மரணப்படையைச் சேர்ந்த இருவர் அடையாளம் காணப்பட்டனர்

(கொழும்பு)

ஊடகவியலாளர் நாமல் பெரேராவை தாக்கிய, கோத்தபாய ராஜபக்ஷவின் இரகசிய மரணப்படையைச் சேர்ந்த இராணுவ புலனாய்வுப் பிரிவினர் இருவர் அடையாளம் காணப்பட்டனர். 2008 ஆம் ஆண்டு கொழும்பு ஊடகக் கல்லூரியின் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்ட நாமல் பெரேரா மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு அவரைக் கடத்திச் செல்ல முயற்சிக்கப்பட்டது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய கோத்தபாய ராஜபக்ஷவின் இரகசிய மரணப் படையில் செயற்பட்ட இராணுவத்தினர் இருவரை நாமல் பெரேரா நேற்று முன்தினம் அடையாளம் காட்டியுள்ளார். கொழும்பு, மேலதிக நீதவான் சந்ரா லியன ஆராச்சியின் முன்னிலையில் இந்த அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

மருதானை ட்ரிபோலி என்ற இராணுவ முகாமில் இரகசியமாக நடத்தி செல்லப்பட்ட இந்த மரணப் படையின் சந்தேக நபரான மேஜர் உட்பட ஆறு இராணுவத்தினர் உட்பட 48 பேர் அடையாள அணிவகுப்பில் கலந்து கொண்டனர்.

அங்கு நாமல் பெரேராவினால் இரண்டாவது சந்தேக நபரான கோப்ரல் ஹேமசந்திர பெரேரா மற்றும் மூன்றாவது சந்தேக நபரான கோப்ரல் பிரபாத் துமிந்த வீரரத்ன ஆகியோரை அடையாளம் காட்டியுள்ளார். அடையாளம் காணப்பட்ட இருவரையும் 26 ஆம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்கு மரணப் படை என்ற இராணுவ அணியை வழி நடத்திச் சென்றதாக குற்றப் புலனாய்வு பிரிவினர், நீதிமன்றில் தெரியப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சிறப்புப் பிரதிநிதியை நியமிக்கிறது ஜப்பான்





இலங்கையில் அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கான சிறப்பு பிரதிநிதி ஒருவரை ஜப்பான் நியமிக்கவுள்ளது. ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், ஜப்பானிய அமைச்சரவைச் செயலர் யொஷிஹிடே சுகா இதனைத் தெரிவித்துள்ளார்.

டோக்கியோவில் பிரதமருக்கும் ஜப்பானிய அமைச்சரவைச் செயலர் யொஷிஹிடே சுகாவுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போதே, ஜப்பானிய பிரதமருக்கான ஆலோசகர் கலாநிதி ஹிரடோ இசுமியை, இலங்கைக்கான சிறப்புப் பிரதிநிதியாக ஜப்பான் நியமிக்கவுள்ளதாக யொஷிஹிடே சுகா தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, இந்தியப் பெருங்கடல் கப்பல் பாதை மற்றும் இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பு ஆகிய விவகாரங்கள் குறித்து முக்கிய கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது, பிராந்தியத்தின் கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இருப்பதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியப் பெருங்கடல் மாநாடு ஒன்றை நடத்த இலங்கை திட்டமிட்டுள்ளதாகவும் இந்தியப் பெருங்கடலின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தொடர்பான பொதுவான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை தாம் பரிந்துரைத்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இலங்கையில் தொலைக்காட்சிகளை டிஜிற்றல் மயப்படுத்துவது குறித்தும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஏற்கனவே, 2002ஆம் ஆண்டு இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்கான சிறப்புப் பிரதிநிதியாக யசூஷி அகாஷியை நியமித்திருந்தது. இவர் இலங்கையில் போர்நிறுத்த காலத்திலும் போர்க்காலத்திலும் போருக்குப் பிந்திய காலகட்டத்திலும் 20 இற்கும் அதிகமான பயணங்களை இலங்கைக்கு மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கையர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

சோமாலிய கடற் கொள்ளையர்களால் கடத்தப்பட்ட 8 இலங்கையர்கள் நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

குறித்த 8 பேரும் கட்டார் விமானச் சேவைக்கு சொந்தமான QR654 என்ற விமானத்தின் மூலம் நேற்று முன்தினம் மாலை 5:12 மணிக்கு இலங்கை சர்வதேச விமரன நிலையத்திற்கு வந்தடைந்துள்ளனர்.

கடத்தப்பட்ட 8 பேரின் உறவினர்கள் பெருந்திரளானோர் விமான நிலையத்திற்கு வருகை தந்து வரவேற்றனர். (இ-7)

# தமிழ், சிங்கள புத்தாண்டின் பின் அரசாங்கத்தில் பாரிய மாற்றம்

## ஜனாதிபதி மைத்திரி திட்டம்

தமிழ், சிங்களப் புத்தாண்டின் பின்னர் அரசாங்கத்தில் பாரிய மாற்றங்கள் சிலவற்றை செய்ய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

அரசாங்கத்தின் பதவிகளிலும் நிகழ்ச்சித் திட்டங்களிலும் இந்த மாற்றங்கள் செய்யப்படவிருப்பதாகவும், ஜனாதிபதி தற்போது அது சம்பந்தமாக ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

புத்தாண்டுக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் மாற்றத்தின் போது இரண்டு முக்கிய அமைச்சர்களின் பதவிகளிலும் மாற்றங்கள் செய்யப்படும் என அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# போலி முறைப்பாடுகள் குறித்து விஷேட அவதானம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 1929 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு உண்மையற்ற தகவல்களை வழங்குபவர்கள் தொடர்பாக விஷேட அவதானம் செலுத்த உள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

1929 என்ற இலக்கத்திற்கு தனிப்பட்ட காரணங்களுக்காக சிலர் பொய்யான முறைப்பாடுகளை மேற்கொள்வதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இவ்வாறான பொய் முறைப்பாடுகள் காரணமாக அரச அதிகாரிகளின் நேரம் மற்றும் உழைப்பு வீணடிக்கப்படுவதுடன், அநாவசியமான முறையில் நிதி விரயமாவதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### உறவுக்கு ஒரு ஸ்டெபிலைசர்

என் உறவினர்களுள் சிலரும் சரி, உங்கள் உறவினர்களுள் சிலரும் சரி, சீசனல் உறவினர்களாக இருப்பார்கள்.

அதாவது, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கண்டு கொள்ள மாட்டார்கள். வெளியூரில் வசிப்பார்கள். தெருக்கோடியில் உள்ள வீட்டிற்கு வருவார்கள். நம்மை தவிர்ப்பார்கள். கடிதம் போட்டால் பதலிடமாட்டார்கள். நேரில் போனால் சரிவர பேசமாட்டார்கள். சரி போகிறார்கள் என்று ஒதுங்கும் நேரத்தில் வலிய வந்து மேலே விழுவார்கள். "சொந்தத்தை விட்டுக் கொடுக்கலாமா? எங்களை எல்லாம் இப்படி அடியோட மறந்திட்டீங்களே?" என்பார்கள்

பார்த்தால் ஏதாவது ஆக வேண்டி இருக்கும். அவர்களுக்கு குறைந்தபட்சம் திருமணம்-விஷேசத்திற்கு வரவேண்டும் என்பதற்காகவேனும் இப்படி வேசம் காட்டுவார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், இவர்களுக்கு எப்போது நாம் வேண்டுமோ, அப்போதுதான் அவர்களுக்கு நாம் வேண்டும். இவர்களுக்கு நாம் வேண்டாம் என்று நினைக்கிற போது நாம் ஒதுங்கி கிடக்க வேண்டியது தானாம்.

அதாவது, இவர்களது இசைக்கு தக்கபடி நாம் ஆட வேண்டும் என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். நல்லாயிருக்கிறதே கதை!

ஏதோ சொந்தம் என்று கிடைத்த இப் பந்தத்தை விட்டுவிட வேண்டும் என்பதற்காக, இவர்களுடன் நாம் இழுத்துக் கொண்டு திரிவோம். ஆனால் நாம் மட்டும் இவர்கள் கட்சியில் சேர்ந்து அவர்களை போலவே ஆகி விடக் கூடாது.

கிட்டப்போனால் முட்டப்பகை என்பார்கள். எனவே ரொம்பவும் இழைய வேண்டாம். ரொம்பவும் விலகிப்போகவும் வேண்டாம். விஷேசம், காரியம் என்றால்தான் போவது, வருவது என்று வைத்துக் கொள்ளாமல், இந்த பக்கமாக வந்தேன்; உங்களைப் பார்த்து விட்டு போகலாம் என்று பிரியப்பட்டேன் என்று ஒரு ரொட்டிப் பைக்கற்றுடனோ, நான்கு பழங்களுடனோ நுழைந்து சேமலாபம் விசாரித்து விட்டு உடனே புறப்பட்டு விடலாம். இப்படி இந்தப் பக்கம் வந்தால் எங்கவீட்டுப் பக்கம் வராம போகவே மாட்டாங்க என்ற பெயரை இவர்களிடம் நாம் எடுத்துவிட வேண்டும். அதன் பிறகு காரியம் ஆக வேண்டும் என்று போங்கள்; செய்து தருவார்கள். விஷேசம் என்று அழைக்கப் போங்கள். அவசியம் வருவார்கள்.

வெளியூர் உறவினரா? வருடக்கணக்கில் அமைதிப்பணி செய்யாமல் மௌனம் கலைத்து, நான்கு வரி எழுதிப்போடுங்கள்.

"கண்டுக்கவே கண்டுக்காத இந்த ஆளு, இன்றைக்கு தனக்கு காரியம் ஆக வேண்டும் என்றால் உடனே வந்து எப்படி குழைவார் பாருங்கள்" என்று பெயர் எடுத்து விடக்கூடாது.

உறவில் ஒரு சீர்மை இருக்க வேண்டும். ஓவராகப் போகவும் கூடாது. ஒதுங்கி போய் விடவும் கூடாது. உறவு எனும் மின்சாரத்தை சீராக 230 வோல்ட் வழங்குகிற ஸ்டெபிலைசராக நாம் மாற்ற வேண்டும்.

இதைச் செய்யாவிட்டால் சந்தர்ப்பவாதி என்று நம்மீது முத்திரை குத்தி விடுவார்கள். இப்படிப்பட்ட அபாண்டமான அவப் பெயர் நமக்கு தேவைதானா?

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுவாசல் மக்கள் மீண்டும் போராட்டம்

## மத்திய அரசு நம்பிக்கைத் துரோகம்



(புதுக்கோட்டை)

இயற்கை எரிவாயுத் திட்டத்திற்கு எதிராக நெடுவாசல் கிராம மக்கள் நேற்று மீண்டும் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இயற்கை எரிவாயு எடுக்கும் திட்டம் தொடர்பாக கடந்த 27 ஆம் திகதி தனியார் நிறுவனங்களுடன் மத்திய அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

இதனால் அதிர்ச்சி அடைந்த நெடுவாசல் கிராம மக்கள், எரிவாயு எடுக்கும் திட்டத்திற்கு எதிராக மீண்டும் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

வாக்குறுதியை மறந்து மத்திய மாநில அரசுகள் நம்பிக்கை துரோகம் செய்ததே மீண்டும் போராட்டத்தை கையில் எடுக்க காரணம் என்றும் நெடுவாசல் மக்கள் தெரிவித்தனர்.

பொலிஸாரின் அனுமதியை மீறி ஏராளமான பெண்களும், இளைஞர்களும் போராட்டத்தில் குதித்திருப்பது நெடுவாசல் கிராமத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் உள்ளிட்ட 31 இடங்களில் இயற்கை எரிவாயு எடுக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு கடந்த பெப்ரவரி மாதம் ஒப்புதல் அளித்தது. இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதை அடுத்து நெடுவாசல் கிராமத்தை மையமாக வைத்து தமிழகம் முழுவதும் போராட்டங்கள் வெடித்தன.

மத்திய மாநில அரசுகள் அளித்த உறுதியை ஏற்று 22 நாட்கள் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி கொள்வதாக நெடுவாசல் மக்கள் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# பிரேசில் சிறையில் கைதிகள் இடையே மோதல் 5பேர் பலி



(பிரேசிலியா)

பிரேசில் சிறையில் இரு கும்பல்களிடையே கடும் மோதல் ஏற்பட்டது.

துப்பாக்கிச்சண்டையில் 4 கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதைக் கண்ட ஒரு கைதி மாரடைப்பால் உயிரிழந்தார்.

பிரேசில் நாட்டில் உள்ள சிறைகளில் அளவுக்கு அதிகமாக கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக அவர்களிடையே அடிக்கடி மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த மோதல்கள் காரணமாக உயிர்ப்பலிகளும் ஏற்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு கைதிகள் இடையே நடந்த மோதல்களில் பல கைதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அங்கு மத்திய மேற்கு மாகாணமான மாட்டோ கிராஸ்சோ மாகாணத்தில் உள்ள சிறையில் இரு கும்பல்களிடையே கடும் மோதல் ஏற்பட்டது. அப்போது நடந்த துப்பாக்கிச் சண்டையில் 4 கைதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இதைக் கண்ட ஒரு கைதி மாரடைப்பால் உயிரிழந்தார்.

17 கைதிகள் படுகாயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து அந்த சிறையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இரு தரப்பினரும் பயன்படுத்திய 2 துப்பாக்கிகளை பொலிஸார் கைப்பற்றினர். (இ-3)

# ஐந்து பேர் போனால் ஆட்சி போய் விடும்

### அ.தி.மு.க. எம்.எல்.ஏ. மீண்டும் மிரட்டல்

இன்னும் 5 எம்.எல்.ஏக்கள் போனால் ஆட்சியே போய் விடும் என சூலூர் தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. கனகராஜ் கூறியுள்ளது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பூர் மாவட்டம் சாமளாபுரம் பகுதியில் புதிய மதுக் கடை திறக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்தப் பகுதியை சேர்ந்த பொதுமக்கள் கடந்த 11 ஆம் திகதி போராட்டம் நடத்தினர். அப்போது அந்த வழியாக வந்த சூலூர் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. கனகராஜை முற்றுகையிட்டனர்.

இதையடுத்து அவரும்பொது மக்களுடன்இணைந்து போராட்டம் நடத்தினார். அப்போது இந்த டாஸ்டாக் கடையை அகற்றாவிட்டால் பதவியை இராஜினாமா செய்வேன் என்றார். மேலும் அவர் கூறும் போது, நான் இராஜினாமா செய்தால் இந்த தொகுதிக்கு இடைத்தேர்தல் வரும். தேர்தல் வந்தால் மக்களுக்கு பணம் கிடைக்கும். அவர்கள் சந்தோசமாக இருக்கட்டும் என்றார். அவரது இந்தப் பேச்சு பரபரப்பை ஏற்படுத்தியது.

பின்னர் எம்.எல்.ஏ. கனகராஜ் அங்கிருந்து புறப்பட்டு சென்றார். அவர் சென்ற சிறிது நேரத்தில் பொலிஸார் தடியடி நடத்தி பொதுமக்களை விரட்டி அடித்தனர்.

இதில் ஈஸ்வரி என்ற பெண்ணின் கன்னத்தில் டி.எஸ்.பி.பாண்டியராஜன் அடித்தார். மேலும் தடியடியில் விசைத்தறி உரிமையாளர் சிவகணேசன் என்பவரது மண்டை உடைந்தது. மதுக் கடைக்கு எதிரான போராட்டம் தீவிரம் அடைந்ததால் சாமளாபுரம் பகுதியில் பதற்றமான சூழ்நிலை உருவானது.

இதேவேளை நிருபர்களுக்கு பேட்டியளித்த கனகராஜ் எம்.எல்.ஏ.,நான் மக்களின் பிரதிநிதி. மக்கள் சொல்வதை அரசிடம் எடுத்து சொல்வது எனது வேலை. பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி அரசிடம் கூறுவேன். நிலைமை மோசமாக இருந்தால் அதுபற்றி அரசிடம் விளக்கிக் கூறுவேன். நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கம்தான். நான் யாருக்கும் பயப்பட மாட்டேன். இன்னும் 5 எம்.எல்.ஏக்கள் போனால் ஆட்சியே போய்விடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்ய முடியாது

## மத்திய அரசு அறிவிப்பு



விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்ய முடியாது என்று மத்திய அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

விவசாயிகளின் கோரிக்கைகள் தொடர்பில் மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு, மத்திய நிதித்துறை இணையமைச்சர் சந்தோஷ்குமார் கங்க்வார் எழுத்து பூர்வமாக தாக்கல் செய்த பதில் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்படுள்ளதாவது,

விவசாயிகளின் கடன்களை தள்ளுபடி செய்யும் திட்டம் மத்திய அரசிடம் இல்லை. எனினும் விவசாயிகளின் கடன் சுமையை குறைப்பதற்கு மத்திய அரசு முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அதன்படி விவசாயிகளுக்கு குறைந்தபட்சமாக 7 சதவீத வட்டியுடன் ரூ.3 இலட்சம் வரை வேளாண் மற்றும் கூட்டுறவு கடன்கள் விவசாயிகள் துறையால் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தக் கடன் தொகையை குறிப்பிட்ட காலத்துக்குள் கட்டி முடிக்கும் விவசாயிகளுக்கு 3 சதவீதம் வரையிலும் வட்டி தள்ளுபடி செய்யப்படுகிறது.

தேசிய பேரிடர்கள் ஏற்படும்போது பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நிவாரண நடவடிக்கைகளை அளிக்கும்படி கடன் அளிக்கும் அமைப்புகளுக்கு மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# அதிகாரிகளை கண்டித்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ. நேற்று உண்ணாவிரதம்




அரசு அதிகாரிகளை கண்டித்தும், தனது கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்காததை கண்டித்தும் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. உண்ணாவிரதம் இருந்து வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பூர் தெற்கு தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. குணசேகரன் செயற்படாத அரசு அதிகாரிகளை கண்டித்தும், கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்காததை கண்டித்தும் நேற்று உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்திருந்தார்.

அதன்படி திருப்பூர் குமரன் சிலை முன்பு நேற்று காலை 8 மணிக்கு குணசேகரன் எம்.எல்.ஏ. தனது உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கினார்.

பந்தல் அமைத்து தனி ஆளாக உண்ணாவிரதம் இருந்து வரும் அவருக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

உண்ணாவிரதம் குறித்து குணசேகரன் எம்.எல்.ஏ. கூறியதாவது,

திருப்பூர் தெற்கு தொகுதிக்கு தேவையான கோரிக்கைகள் குறித்து அரசு மற்றும் மாநகராட்சி அதிகாரிகளிடம் எடுத்து கூறியுள்ளேன்.

ஆனால் அதை அதிகாரிகள் கண்டு கொள்ளாமல் மெத்தனப்போக்கை கடைப்பிடித்து வருகிறார்கள்.

குறிப்பாக நொய்யல் வீதியில் முதலாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை செயற்படும் உயர்நிலைப்பள்ளியில் இடநெருக்கடியை தீர்க்க முதலாம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை தனியாக தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டது.

அரசு இருந்தும் கோரிக்கைகளை கண்டுகொள்ளவில்லை.

மேலும் பூலாவரி சுகுமார் நகரில் குடிசை மாற்று வாரியத்துக்கு பணத்தை வழங்கியவர்களுக்கு பத்திரம் வழங்க மறுக்கப்படுகிறது.

தொடர்ந்து நொய்யல் ஆற்றை தூர்வாரி கொன்கிறீட் தளம் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த திட்ட மதிப்பீடு வழங்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# உலகின் மிகப் பெரிய முன்மாதிரியான நகரை அமைக்கவுள்ள சவுதி அரேபியா

உலகின் மிகப்பெரிய முன்மாதிரியான பொழுது போக்கு நகரை அமைக்கவுள்ள திட்டத்தை சவுதி அரேபியா அரசு வெளியிட்டுள்ளது. சவுதி அரேபியாவின் தலைநகர் றியாத்தின் எல்லையில் தான் இந்த உல்லாச நகரம் அமைக்கப்படவுள்ளது.

334 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டு உருவாகவிருக்கும் பொழுது போக்கு நகரம் கலாசாரம், விளையாட்டு போன்ற செயற்பாடுகளுக்கான ஓர் இடமாக அமையும் என சவுதி துணை இளவரசர் முகமது பின் சல்மான் தெரிவித்துள்ளார்.

இந்த உல்லாச நகரத்தின் கட்டுமானப் பணிகள் அடுத்த ஆண்டு தொடங்கி 2022 ஆம் ஆண்டில் நிறைவடையும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நகரம் பார்வையாளர்களை மட்டும் ஈர்க்காமல், தலைநகரில் வசிப்பவர்களுக்கு ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கையை கொடுக்கும் என தெரிகிறது. எண்ணெய் வருமானத்தை மட்டுமே சார்ந்திருப்பதை குறைப்பதற்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் இலக்குகளைக் கொண்ட நோக்கு 2030 ஆகியவைகளுக்கு ஒரு பகுதியாக சவுதி அரசு இதை நிறைவேற்றவுள்ளது. (இ-3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய பழங்களில் எதைக் கொள்வோம். எதைத் தள்ளுவோம்.

– செகப்பிரியர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இறைவனால்தான் எமக்கு நல்ல தலைவர்களை தர முடியும்

தலைவன் என்பவன் நீதியை நிலைநாட்டுபவன். அனைத்து ஜீவராசிகளையும் பாதுகாப்பவன். மக்கள் குறைகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்திப்பவன். அவனே உண்மையான தலைவனாக இருக்க முடியும்.

தலைவன் தக்கது செய்யத் தவறினால் மிகப்பெரும் அழிவுகளைத் தந்து போகும். அதனால்தான் நம் தமிழ் மன்னர்கள் நீதியை நிலைநாட்டுவதே தங்கள் கடமையெனக் கருதினர்.

மனுநீதி கண்ட சோழன் ஒரு பசு மாட்டின் துன்பம் தீர்க்க தனக்குத் துன்பம் தேடினான். பாண்டிய மன்னன் தான் வழங்கிய தீர்ப்புத் தவறு என்றுணர்ந்ததும் தன்னுயிர் நீத்தான்.

இதுபோன்று பலவற்றை உதாரணப்படுத்த முடியும். இவையெல்லாம் இறந்தகாலச் செய்திகளேயன்றி நிகழ்காலத்தில் தேடுதற்கரிய விடயங்களே.

இருந்தும் தலைவன் – தலைமை என்பது நேர்மை, நீதி, தியாகம், அன்பு, பணிவு, இன்சொல், பிறர்க்கு உதவும் மனப்பாங்கு, நடுநிலை என பண்புத் தரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் அவை எதுவும் சமகாலத்தில் இல்லாது போயிற்று.

குறிப்பாக தமிழ் மக்களின் சமகால அரசியல் தலைமை என்பது தமக்கு மக்கள் வழங்கிய ஆணைகளைக் காப்பாற்றுவதை மறந்து ஆட்சியாளர்கள் சிரித்து விட்டால் அவர்கள் பின்னால் ஓடுகின்ற மனநிலையைக் கொண்டுள்ளது.

நமக்கு இவர்கள் உதவுவார்கள். இவர்களுக்கு வாக்களிக்கலாம் என்று மக்கள் நம்பி வாக்களிக்க,

தேர்தலில் பெற்ற வெற்றி, பதவி ஆசையாக மாற வாக்களித்தவர்களை மறந்து அவர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யத் தலைப்படுவது மிகப்பெரும் கொடுமைத்தனமாகும்.

எனினும் இக்கொடுமைத்தனம் அரங்கேறுகிறது என்றால் அதற்கு நாம் செய்த தவக் குறைவும் காரணம் என்றுணர்வது அவசியம்.

மெய்ப்பாதுகாவலனை நம்பியே ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட பிரதானிகள் உறங்குகின்னர். அந்த மெய்ப் பாதுகாவலன் தன் பணியை மறப்பானாயின் – விலை போவானாயின் நம்பிக்கை என்பது அந்தோ என்றாகிவிடும்.

இதுபோலத்தான் ஒவ்வொன்றும். மருத்துவரை நோயாளி நம்புகின்றான். ஆசிரியரை மாணவரும் பெற்றோரும் நம்புகின்றனர். மதத் தலைவர்களை மக்கள் சமூகம் நம்புகிறது.

இந்த நம்பிக்கைக்கு மாறாக யார் செயற்பட்டாலும் அது மிகப்பெரும் துரோகத்தனத்தை ஏற்படுத்தி விடும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஆகையால் தலைவன், நல்ல மருத்துவர், நல்ல குரு இவர்கள் வந்து வாய்ப்பதற்கு நாம் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

ஆனால் சமகால சூழ்நிலைகளைப் பார்க்கும்போது, தமிழ் மக்களிடம் தவக் குறைவு உண்டு என்றும் அதனால்தான் இருக்க வேண்டியதை இழந்தும் இழக்க வேண்டியதை ஏற்றும் வாழும் அவலம் நமக்குக் கிடைத்துள்ளது என்று நினைப்பதில் தவறில்லை.

எனவேதான் ஒட்டுமொத்தத் தமிழர்களும் இறைவனிடம் வேண்டுதல் செய்ய வேண்டும். நல்ல தலைவர்கள் அல்லது நல்ல அரசியல் தலைமை நமக்கு கிடைக்க வேண்டும் என்று.

பிறக்கின்ற தமிழ்ப் புத்தாண்டில் இவ் வேண்டுதலை இறைவனிடம் நாம் முன்வைத்து எதிர்காலத்திலாவது ஒரு நல்ல அரசியல் தலைமையை பெற்று நிற்போம்.

# வாகன விபத்துக்களில் ஐவர் பலி

(கொழும்பு)

நேற்றைய தினம் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துருகிரிய, மதவாச்சி, பொலநறுவை, தம்புள்ளை ஆகிய பகுதிகளில் வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

கடுவெல - மாலபே வீதியின் அத்துருகிரிய - வெலிவிட்ட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

டிப்பர் வாகனமும் காருமநேற்று அதிகாலை நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளாகியதால் மாலபே, கொட்டுகொட பகுதிகளைச் சேர்ந்த 19 மற்றும் 28 வயதுகளையுடைய இருவரே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் சடலம் ஹோமாகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கண்டி - யாழ்ப்பாணம் பிரதான வீதியின் மதவாச்சி, கனதராவ பகுதியில் பஸ் நடத்துநர் ஒருவர் தாம் பணிபுரியும் பஸ்ஸிலேயே அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

யாழ் - கொழும்பு, மன்னார் - கொழும்பு தனியார் பஸ்கள் ஒன்றுக்கொன்று போட்டியாகச் செல்ல முற்பட்டதால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் 21 வயதுடைய மதவாச்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இரண்டு பஸ்களினதும் சாரதிகள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன.

இதேவேளை பொலநறுவையிலும் தம்புள்ளையிலும் இடம்பெற்ற விபத்துக்களில் இருவர் உயரிழந்துளளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## சாஸ்திரங்கள்

✦ செவ்வாய்க்கிழமை தோறும் ராகு காலத்தில் (பிற்பகல் 3-4.30) துர்க்கைக்கு பூஜை செய்துவர குழந்தை பாக்கியம் ஏற்படும்.

- நன்மொழி நாமங்கள்

✦ புதன்கிழமை தோறும் ராகு காலத்தில் (நண்பகல் 12-1.30) துர்க்கைக்கு பூஜை செய்ய கல்வியில் உயர்ந்து விளங்குவார்கள்.

- நன்மொழி நாமங்கள்



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### வாழ்க்கையின் இசை

இறைவன் கண்ணுக்குத் தெரியாத நடத்துநர் (conductor) நாமாக மறுபடியும் இசையை இனிமையாகப் பாடும் வரை, இனிய இசையோடு (இறைவனோடு) நம்மை இணைப்பவர் குரு. ஒருமுறை அந்த தாளத்தை (சந்தத்தை) நாம் பிடித்துக் கொண்டால் இசை தங்கு தடையின்றிப் பாய, குரு சாதுரியமாகப் பின்னால் சென்று விடுகிறார்.




திருப்பதி செல்லும் ஒவ்வொரு முறையும் உங்கள் கைவசம் விபரமில்லாததால் எத்தனையோ முக்கிய மையங்களை கவனிக்காமல் கடந்து போயிருப்பீர்கள். அவற்றைப் பற்றி இந்தப் புத்தகத்தில் காணலாம். திருப்பதி குறித்த பதிலில்லாத பல கேள்விகள், உங்கள் மனதில் எழுந்திருக்கக் கூடும். அவற்றுக்கான பதில்கள் இந்தப் புத்தகத்தில் கிடைக்கலாம். ஆன்மீக ஓவியங்கள் படைப்பதில் தனக்கென தனியிடம் பிடித்துள்ள ஜெ.பி. திருப்பதி பயணங்களில் உடன் வந்துபல அரிய காட்சிகளை பென்சில் முனைகளாலும் தூரிகைகளாலும் அற்புதமாய் பதிவு செய்து தந்தார். நாராயணனைத் தேடி நடந்தேறும் பதையில் காலி கோபுரம் கண்டிருப்பீர்கள். (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

### எவ்வாறு உணவருந்த வேண்டும்?

உணவருந்தும்வேளையில் கை, கால்களைக் கழுவி வாய் கொப்பளித்து பலகையில் அமர்ந்து உணவருந்தும் பழக்கத்தை நம் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்தார்கள். சம்மணமிட்டு அமர்ந்து உணவருந்த வேண்டும். வயிறு நிறைய உணவருந்தக் கூடாது. அரைவயிறு ஆகாரமும் கால் வயிறு தண்ணீரும் சேர்த்து முக்கால் வயிறு மட்டுமே உணவருந்த வேண்டும்.




கால் வயிறு எப்போதும் வெறுமனே இருக்கவேண்டும் என்பது ஐதீகம். அவ்வாறு இல்லையென்றால் செரிமானம் தடைப்படும்.

ஒரு போத்தல் நிறைய தண்ணீரை நிரப்பி வைத்தால் அந்தப் போத்தலைக் குலுக்கி கழுவிச் சுத்தம் செயய முடியாது என்பது நமக்குத் தெரியும். அதேபோல் வயிறு நிறைய உணவருந்தினால் இரைப்பை நிறைந்து நிற்கும்:

அது சுருங்கி விரிந்து உணவை செரிமானம் செய்வதற்கு மிகவும் சிரமப்படும்.

அப்போது நமக்கு மூச்சு முட்டுவதாகத் தோன்றும் சோம்பேறித்தனமாக இருக்கும் ஐயோ என்னால் முடியவில்லை என்று கூறி சோர்ந்து இருந்து விடுவோம்.

(தொடரும்)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### மாங்கல்யம் தந்துனானே இதற்கான அர்த்தம் தெரியுமா?

திருமணத்தில் பெண்ணின் கழுத்தில் மாங்கல்யத்தினை அணிவிக்கும் போது,

மாங்கல்யம் தந்துனானே
மமஜீவன ஹேதுநா
கண்டே பத்நாமி ஸுபகே
த்வம ஜீவ சரதஸ்சதம்

எனும் மந்திரத்தினை கூறுவதை கேட்டிருப்போம்.

இதன் பொருள் "மாங்கலமான பெண்ணே! உன்னோடு இன்று நான் துவங்கும் இல்லறவாழ்வு நல்லமுறையில் இருக்க வேண்டும் என்று உறுதியளித்து, இந்த திருமாங்கல்யத்தை உன் கழுத்தில் அணிவிக்கிறேன். [illegible] சுகங்களில் [illegible] நூறாண்டு காலம் வாழ்வாயாக" என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### இறை நேசத்திற்குரியவர்

❖ தனி மனிதனின் உரிமைகளை பறிக்க கூடாது. சமுதாயத்தின் தேவைகளை புறக்கணிக்கக்கூடாது. இவ்விரண்டிற்கும் இடையில் இணக்கமும் நடுநிலையும் வேண்டும்.

❖ கொடுமைக்குள்ளானவனின் பிரார்த்தனைக்கு அஞ்சுங்கள். ஏனென்றால் அந்தப் பிரார்த்தனைக்கும் இறைவனுக்குமிடையில் திரை கிடையாது. (இறைவனால் விரைந்து ஏற்றுக் கொள்ளப்படும்)

❖ செல்வ வளம் என்பது அதிக செல்வத்தைப் பெறுவதல்ல. போதுமென்ற மனதைப் பெறுவதே உண்மையான செல்வமாகும்.

❖ படைப்புகள் அனைத்தும் இறைவனின் குடும்பமாகும். படைப்புகளுக்கு நன்மை புரிபவரே இறை நேசத்திற்கு உரியவராவர்.

❖ இறைநம்பிக்கையாளன் நேசத்தின் சிகரமாவான். மக்களை நேசிக்காதவனிடமும், மக்களால் நேசிக்கப்படாதவனிடமும் எந்த நன்மையும் இல்லை.

❖ இறைவன் ஒருவனே! அவனே அகிலத்தையும், அகிலத்தாரையும் படைத்தான். எனவே, அனைத்து நாடுகளும், அனைத்து மனிதர்களும் சமமே. இறைவனின் வழிகாட்டுதலும் அனைவருக்கும் பொதுவானதே!

**வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து**

# தலைவர் கிண்ண உதைபந்தாட்டம்

# தெல்லிப்பழை நாமகளை வீழ்த்தி இறுதிப் போட்டியில் சென்லூட்ஸ்




வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் தலைவர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் தெல்லிப்பளை நாமகள் அணிக்கெதிராக இளவாலை சென் லூட்ஸ் விளையாட்டு கழகம் பலப்பரீட்சை நடத்தியது.

வழங்கப்பட்ட நேரத்தில் முதல் பாதியில் நாமகள் ஒரு கோலினைப்போட்டு முன்னிலை பெற்றாலும் இரண்டாம் பாதியில் சில மாற்றங்களுடன் களமிறங்கிய இளவாலை சென் லூட்ஸ் விளையாட்டுக்கழகம் நேர்த்தியான பந்துப் பரிமாற்றம் மூலம் தமிழ் ஒரு கோலினைப்போட்டு சமப்படுத்த ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளில் இரண்டை ஜொமி இலாவகமாக தடுக்க மூன்றுக்கு இரண்டு என வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. (க)

# அல்வாயில் கிரிக்கெட் தொடர் சனிக்கிழமை ஆரம்பம்

பிரித்தானியா ,சுவிட்சர்லாந்து ஒன்றியங்களின் ஏற்பாட்டில் அல்வாய் பிரதேசத்தில் இயங்கிவரும் கழகங்களுக்கிடையிலான விளையாட்டு போட்டிகள் இடம்பெற்று வரும் நிலையில் நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 8-30 மணியளவில் ஆண்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆரம்பமாகவுள்ளது , இம்முறை 18 அணிகள் மோதும் .அணிக்கு 10 ஓவர் 11 பேர் கொண்ட கிரிக்கெட் தொடரில் கடந்த காலங்களில் பலமிக்க அணிகளாக வலம் வந்த மாலு சந்தி மைக்கல் ,அல்வாய் கலைமகள் ,வதிரி டயமன்ஸ் ,குரும்பகட்டி உதயசூரியன், அல்வாய் மனோகரா ,அல்வாய் இளைஞர்கள் , திக்கம் இளைஞர் போன்ற அணிகள் மோதவுள்ளது.

மேல்க்குறிப்பிட்ட அணிகள் பல இறுதிப்போட்டிகளை பங்கு கொண்ட அணிகள் அத்துடன் அல்வாய் பாரதி, அல்வாய் நக்கீரன் , அல்வாய் நாவலடி , கலைமகள் காந்தியூர் , இளம்பிறை அல்வாய் குமிழடி , சிறப்பாக உருவாகி வருகின்றது , இம்முறை கிரிக்கட் தொடர் சிறந்த போட்டி அமையவுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

# புதுக்குடியிருப்பு சுப்பேர்ப்றாங் வி.க இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது



வற்றாப்பளை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரில் பங்கு பற்றிய புதுக்குடியிருப்பு சுப்பேர்ப்றாங் விளையாட்டு கழகம்

முதல் போட்டியில் ஆனந்தா அணியுடன் 3-2 என்ற அடிப்படையிலும் அடுத்த போட்டியில் முள்ளியவளை வளர்மதி அணிக்கெதிராக 4-0 என்ற அடிப்படையிலும் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றது.

கடந்த புதன் கிழமை அன்று இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் இரணைப்பாலைசென் அன்ரனீஸ் அணிக் கெதிராக 2-0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது. எதிர்வரும் 16-04-2017 அன்று இறுதிப்போட்டியில் செல்வபுரம் சந்திரன் அணியை எதிர்கொள்ளவுள்ளது (க)

# புலோலி இளைஞர் வி.கழகத்தின் கிரிக்கெட் போட்டி முடிவுகள்

21 வயதிற்குட்பட்டோருக்கான இளையோருக்கான கிண்ணம். 9 வீரர்கள் 7 ஓவர் கொண்ட போட்டியில் இறுதிப்போட்டிக்கு கொலின்ஸ் மற்றும் கொம்மந்தறை அணிகள் தெரிவாகியுள்ளன.

புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த சுற்றுத் தொடரில் 21 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் தொடரில் 24 கழகங்கள் பதிவுகளை மேற்கொண்டு 18 கழகங்கள் போட்டியில் கலந்து கொண்டன.

அந்த வகையில் 6 அணிகள் அடுத்த சுற்றுக்கு தெரிவாகின.

கொலின்ஸ் ,உபயகதிர்காமம் ,கொம்மந்தறை,வதிரி கலைமகள் ,ஞானம்ஸ் ஞானம்ஸ் விளையாட்டு கழகம் கரவெட்டி , புலோலி இளைஞர் வி.க.ங்கள் தெரிவாகின.

அந்த வகையில் இறுதிப் போட்டிக்கான அணியை தெரிவு செய்யும் போட்டிகள் 11.04.2017 மாவில் மைதானத்தில் இடம் பெற்றது.

முதலாவது போட்டியாக கொலின்ஸ் எதிர் வதிரி கலைமகள் போட்டி இடம் பெற்றது. கொலின்ஸ் அணி வெற்றியை பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியது.

இரண்டாவது போட்டியாக ஞானம்ஸ் எதிர் புலோலி இளைஞர் விளையாட்டுக்கழகப் போட்டி இடம் பெற்றது போட்டி சமனிலையில் முடிய சுப்பர் ஓவர் முறையில் ஞானம்ஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியது.

மூன்றாவது போட்டியாக உபயகதிர்காமம் எதிர் கொம்மாந்தறை போட்டி இடம் பெற்றது.

போட்டியில் கொம்மந்தறை அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியது.

அடுத்த சுற்றுக்கு தெரிவாகிய ஞானம்ஸ்கொலின்ஸ்கொம்மந்தறை அணிகள் லீக் முறையில் மோதிக் கொண்டன.

முதலில் ஞானம்ஸ் எதிர் கொலின்ஸ் போட்டி இடம் பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொலின்ஸ் அணி ஞானம்ஸ் அணிக்கு 75 ஓட்டங்களை நிர்ணயித்தது.

பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய ஞானம்ஸ் அனைத்து இலக்குகளையும் இழந்து 64 ஓட்டங்களை பெற்றது. கொலின்ஸ் அணி 10 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

வெற்றி பெற்றால் 4 புள்ளிகள் 70 +க்கான 1 புள்ளி எதிரணியின் அனைத்து விக்கெட்களையும் சாய்த்ததால் 1 புள்ளி என 6 புள்ளிகளை பெற்றது கொலின்ஸ் அணி.

இரண்டாவது போட்டியாக ஞானம்ஸ் எதிர் கொம்மந்தறை போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் 55 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொம்மந்தறை 7 விக்கெட்களை இழந்து 28 ஓட்டங்களை பெற்றது ஞானம்ஸ் அணி வெற்றி பெற்று 4 புள்ளிகளை பெற்றது.ஞானம்ஸின் அனைத்து விக்கெட்களையும் சாய்த்ததால் கொம்மந்தறை 1 புள்ளியை பெற்றது.

கொலின்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு தெரிவாகிய நிலையில் மூன்றாவது போட்டியான கொம்மந்தறை எதிர் கொலின்ஸ் அணி போட்டியானது கொலின்ஸ் வெற்றி பெறும் பட்சத்தில் ஞானம்ஸ் அணியும்.கொம்மந்தறை அணி வெற்றி பெற்றால் இறுதிப்போட்டிக்கு கொம்மந்தறை அணியும் தெரிவாகும் என்ற நிலையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொலின்ஸ் 38 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொம்மந்தறை 3 விக்கெட்களால் வெற்றியை பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியது. (க)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III

# ஸ்கந்தாஸ்ரார் அணியை வீழ்த்தி மானிப்பாய் பரீஸ் முதல் வெற்றி

சிறிலங்கா கிரிக்கெட் பிரிவுIII 2017 சுற்றுப்போட்டி தொடரில் 4 ஆவது போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணி, ஸ்கந்தாஸ்ரார் அணியை 97 ஓட்டங்களால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணி 41 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 209 ஓட்டங்களை பெற்றனர். நிரோஸ்குமார்-16, நிதர்ஸன்-20, விநோத்-13, ஜெயதீபன்-44, கிசோ-39, யாழினியன்ஆட்டமிழக்காது 14, விக்கி-21 ஓட்டங்களை பெற்றனர்.

சோபிகன்-01, கதியோன்-02, அனேஜ்-04, விதுஸன்-02 இலக்குகளை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 25.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 112 ஓட்டங்களை பெற்றனர்.

மிதுஸன்-23, நிசாந்-13, அனேஜ்-18, நிரேஸ்-17 ஓட்டங்களை பெற்றனர். விநோத்-01, கரிகரன்-03, கிசோ-01, யாழினியன்-01, நிரோஸ்-01, விக்னேஸ்-02, நிதர்சன்-01 இலக்கினைக் கைப்பற்றினர்.

யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு மானிப்பாய் பரீஸ் அணி 9.06 புள்ளிகளையும் ஸ்கந்தாஸ்ரார் அணி 2.12 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழுக்கி வீழ்ந்த...

சபாரத்தினம் (வயது 75) என்பவரே மேற்படி உயரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் முன்னர் யாழ் தபால் திணைக்களத்தில் கடமை புரிந்துள்ளதுடன் தற்போது கனடாவில் வசித்தும் வந்துள்ளார். இந்நிலையில் கனடாவில் இருந்து தனது ஓய்வூதிய நிலுவையை பெற்றுக்கொள்ள கடந்த 8ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளார்.

யாழ்.வந்த அவர் கடந்த 9ஆம் திகதி காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்ததால் மறுநாள் 10ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

நேற்று முன்தினம் 12ஆம் திகதி அதிகாலை 4.30 மணியளவில் குளிப்பதற்காக வைத்தியசாலையில் குளியலறைக்குள் சென்றபோது அங்கு நிலத்தில் சடுதியாக வழுக்கி விழுந்ததில் தலையில் பலமாக அடிபட்டுள்ளது. காயமடைந்த அவர் அன்றைய தினம் பி.ப 2.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமாரினால் மேற்கொள்ளப்பட்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-9)

## இன்புளுவன்சா...

ன்றது. எனவே இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்று யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் எஸ்.ஸ்ரீ பவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் H1, N1 வைரஸ் காய்ச்சல் தொடர்பிலான மக்கள் தெளிப்படுத்தும் ஊடகவியலாளர்கள் சந்திப்பு நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்றது. அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இன்புளுவன்சா வைரஸ் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட 510 பேர் முதற்கட்டமாக அனுமதிக்கப்பட்டு இருந்தார்கள். இவ்வருடம் ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை 95 பேரின் இரத்த மாதிரிகள், பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி இருந்தோம். அந்த வகையில் 36 பேருக்கு இந்த நோய் அறிகுறிகள் காணப்பட்டுள்ளது.

H1, N1 என்பது புதிதாக இனம்காணப்பட்ட வைரஸ் காய்ச்சல் ஆகும். இருமல், தும்மல் போன்றவற்றால் பரவக்கூடிய ஒரு நீர் வைரசாக உள்ளது. சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அதிகமாக தாக்கத்தை இந்த நோய் ஏற்படுத்துகின்றது. நிறை குறைந்தவர்கள் மற்றும் போசாக்கான உணவுகளை உட்கொள்ளாதவர்களுக்கு இந்த நோயின் தாக்கம் அதிகமாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (செ-11)

## மரம் முறிந்ததில்...

பபெண். தனது வீட்டு வளவில் இருந்த 12 அடி இலுப்பம் மரம் ஒன்று மின்கம்பிகளுடன் உரசுவதால் அதை வெட்டி வீழ்த்துமாறு அயலவரை கேட்டுள்ளார்.

அப்போது முற்பகல் 11 மணியளவில் மரத்தினை வெட்டும் போது வேலிக்கு வெளியே நின்று அதை பார்த்த வண்ணம் குறித்த மாது நின்றுள்ளார். அவர் நிற்பதை மரம் வெட்டுபவர் அவதானிக்கவில்லை. துரதிர்ஷ்ட வசமாக குடும்பபெண் நின்றிருந்த பகுதியை நோக்கி மரம் விழுந்துள்ளது.

மரம் குறித்த பெண் மீது விழுந்ததில் அவர் நிலத்தில் குப்பற விழுந்துள்ளார். அப்போது நெற்றியில் கல் குற்றியதில் இரத்தம் அதிகளவில் வெளியேறியுள்ளது.

கீழே விழுந்தவர் சத்தமின்றி விழுந்ததால் உடனடியாக எவரும் கண்டு கொள்ளவில்லை. பின்னர் தான் அயலவர்கள் அவர் நிலத்தில் குப்புற விழுந்து கிடந்ததனை அவதானித்து சங்கானை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் மாலை உயிரிழந்துள்ளார். (செ-9,30)

## விமலின் விடுதலை...

அத்துமீறி தலையிட்டுள்ளதாக நவ சம சமாஜக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

அரச வாகனங்களை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இனவாதியான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவை விடுதலை செய்வதற்காகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நீதித்துறையில் தலையிட்டுள்ளதாகத் தெரிவிக்கும் நவ சம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன, இதனை எந்தவிதத்திலும் நியாயப்படுத்த முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேறறு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றார்.

ஜனநாயக புரட்சியை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான வாய்ப்பு எமக்கு உள்ளது. அதிலும் தமிழ் மக்களின் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. அதன்காரணத்தால் உலகம் முழுவதில் இருந்தும் பாரிய அழுத்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

அதனால் அதற்குரிய விடயங்களை செய்ய வேண்டிய தேவை உள்ளது. அந்த காலத்திற்குள் எமது நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த சில விடயங்களை செய்ய வேண்டும். பொருளாதார நெருக்கடி ஏற்படும் போது விஷத்தன்மையுள்ள இனவாதிகள் உருவாகிவிடும் வாய்ப்பு உள்ளது. இனவாதத்திற்கு உரமிடுவது எங்கு என பார்க்கின்றனர்.

தற்போது இனவாத தலைவர்களான சிங்கத்தின் இரத்தம் உள்ளவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து புத்தாண்டில் நாம் எவ்வாறு உணவு அருந்துவது என கேட்கின்றனர். புத்தாண்டில் உணவு அருந்த முடியாதாம். புத்தாண்டு தமக்கில்லையாம். புத்தாண்டில் உண்பதற்கான நிலைமையை இந்த அரசாங்கம் இல்லாது செய்துள்ளது என குற்றம் சாட்டி பாரிய பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த நிலைமைக்குள் இருந்துகொண்டு தற்போது மேற்கொள்வதற்கு முயற்சிக்கப்பட்டு வரும் அரசியலமைப்பு திருத்தங்கள் அதே போன்று வடக்கு கிழக்கு மக்களின் பூர்வீக காணிகளை மீளப் பெற்றுக்கொடுத்தல், காணாமல் போனோரை கண்டறிதல் போன்ற செயற்பாடுகளுக்கும் தடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த நேரத்தில் விமல் வீரவன்சவிற்கு பிணை வழங்குவது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க நீதித்துறையில் தலையிட்டமை, இனவாதிகளுக்கு மேலும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. நல்லதோ கூடாதோ நீதித் துறைசார் பிரச்சினைகளில் தலையிடுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல என்றே நாம் கருதுகின்றோம். அதனை செய்வது பொருத்தமற்றது.

நன்மைக்கே இதன்ன நாம் செய்தோம் என கூறினாலும் தீய ஒன்றுக்காகவும் இதனை செய்தீர்களோ என்று தெரியாதா? என மக்கள் கேட்பார்கள். நன்மைக்காகவோ தீமைக்காவோ நீதித்துறையில் கை வைப்பது முற்று முழுதாக தவறான செயற்பாடு. அதற்கு நாம் கண்டனம் வெளியிடுகின்றோம். இந்த அரசாங்கத்தை அதிகாரத்திற்கு கொண்டுவர நாங்கள் பாடுபட்டோம்.

தற்போதுள்ள அரசியலமைப்பு ஊடாக நீதித்துறைக்கு இருக்கும் சுதந்திரத்தில் கை வைப்பதற்கு அனுமதிக்க முடியாது.

நாங்களும் சிறையில் இருந்தவர்கள். 1980ஆம் ஆண்டுகளில் ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கம் இருந்த காலப்பகுதியில் மெகசீன் சிறைச்சாலையில் மூன்று மாதங்கள் வரை நாம் இருந்தோம். அன்று எம்மீது பரிதாபம் காட்டி, வெளியில் எடுக்கவில்லை.

இன்று விமல் வீரவன்ச என்பவர் இனவாதத்தை தூண்டி நாட்டில் மீண்டும் ஒரு இரத்தக்களரியை ஏற்படுத்துவதற்காக குரல் கொடுத்த ஒருவர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்ற தேசத்துரோகியை தூக்கிலிட வேண்டும் என கூறியவர்தான் விமல் வீரவன்ச.

அவ்வாறானவருக்கு இவ்வாறு நியாயம் வழங்க வேண்டும் என எண்ணி தலையிட்டால், வேறு வழிவகைகளை கையாளுங்கள். நீதித்துறையில் கை வைக்க வேண்டாம் என நாம் கேட்டுக்கொள்கின்றோம் என விக்கிரபாகு கருணாரத்ன தனது உரையில் தெரிவித்தார். (செ-11)

## வரிச்சலுகையை...

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய ஐரோப்பிய பாராளுமன்றத்தின் சர்வதேச வர்த்தகக் குழுவின் உறுப்பினர்கள் மேற்படி விடயத்தை திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

இலங்கையின் தற்போதைய மைத்திரி ரணில் அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறியதை அடுத்து ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து ஜ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகைளை மீளப்பெற்றுக்கொள்ளும் பகரத முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இதற்கமைய கடந்த ஆண்டு பெல்ஜியம் தலைநகர் பிரசல்சிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையகத்திற்கு நேரில் விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் டொனால்ட் டஸ்க் உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்களை சந்தித்து ஜ.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகைளை மீளப்பெற்றுக்கொடுக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கமைய இலங்கைக்கு மீண்டும் ஜ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகையை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் கொள்கை அளவில் இணக்கம் கண்டுள்ளது. எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு, ஐரோப்பிய பாராளுமன்றில் அங்கீகாரம் பெற வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இந்த நிலையில் ஐரோப்பிய பாராளுமன்றத்தின் சர்வதேச வர்த்தகக் குழுவில் இடம்பெற்றுள்ள இடதுசாரி பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று கொழும்பு வந்து இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றது.

கடந்த சில தினங்களாக கொழும்பிலுள்ள அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், பொது அமைப்புக்கள் உட்பட பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடியுள்ள ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினர்.

அதில் கருத்து வெளியிடுகையில்,

என்ன நடைபெற்றதென்பதை மிகவும் தெளிவாக கூறுவதென்றால் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தினால் இறுதி அங்கிகாரம் தரப்படவேண்டியதான யோசனையை ஐரோப்பிய ஆணைக்குழுவானது பரிந்துரைத்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவின் யோசனைப் படி சாசனங்களில் வெறுமனே கைச்சாத்திட்டால் மாத்திரமே போதும் என்ற நிலைப்பாடு காணப்படுகின்றது. ஆனால் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் இன்னமும் அதன் நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டியுள்ளது.

அந்தவகையில் நாம் ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழுவின் நிலைப்பாட்டை நாம் ஏற்கவில்லை. ஐரோப்பிய ஆணைக்குழுவானது மாறுபட்ட யோசனையை முன்வைத்துள்ளமை உண்மை. ஆனால் தற்போது ஐரோப்பிய நாடாளுமன்றம் இது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. நாம் எதிர்க்க முடியும். இந்த நிபந்தனைகள் தொடர்பில் நாம் எதிர்ப்பு வெளியிடுவோம்.

நாம் இன்னமொரு விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். ஒருவருடத்திற்கு முன்பாக ஐரோப்பிய ஆணைக்குழுவானது சர்வதேச வர்த்தகம் தொடர்பான அதன் மூலோபாயத்தை ஆரம்பித்திருந்தது. இந்த திட்டத்தின் பெயர் அனைவருக்கும் வர்த்தகம் என்பதாகும்.

ஐரோப்பிய ஆணைக்குழு வர்த்தகத்தை முன்னேற்றுவதற்கு புதிய திட்டங்களை வகுத்து அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்ற போது நாம் கம்பனிகள் மாத்திரம் பலன் பெறாது அனைவரும் நன்மை பெறும் வகையில் எமது நியாயப்பாட்டை முன்வைப்போம் என அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை கொழும்பிலுள்ள தொழிற் சங்க பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்த நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஐரோப்பிய பாராளுமன்ற சர்வதேச வர்த்தக் குழுவில் அங்கம் வகிக்கும், நெதர்லாந்து சோசலிசக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஆன் மேரி மின்வர் இலங்கை வழங்கிய பல உறுதிமொழிகள் இன்னமும நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

சாசனங்களுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவது நாம் நினைத்தவகையில் இடம்பெறவில்லை. ஆனால் நாம் பேரம் பேசுதலுக்கான உரிமை, கூட்டம் கூடுவதற்கான உரிமை மற்றும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான உரிமைகளை உறுதிப்படுத்துவதில் நாம் கவனம் செலுத்துவோம்.

அந்த வகையில் இன்னும் பல முன்னேற்றங்கள் அடையப்படமுடியும் என நினைக்கின்றேன். ஐரோப்பிய மக்கள் கட்சியைச் சேர்ந்த சோசலிச மற்றும் ஜனநாயக வாதிகளும், பசுமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் உட்பட ஏனைய பலரும் கடிதங்களை எழுதியிருக்கின்றார்கள்.

இந்த சாசனங்கள் உண்மையில் நடைமுறைப்படுத்தப்படாவிடின் ஜ.எஸ்.பி பிளஸ் சலுகையை மீண்டும் வழங்குவது தொடர்பாக ஆர்வம் காண்பிக்கவில்லை என்பதை அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றனர். இந்த விடயத்தில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் உள்ள பல்வேறு தரப்பினருடனும் நாம் விரிவான பேச்சுக்களை நடத்த வேண்டும். வர்த்தகமானது அனைவருக்கும் நன்மை பயப்பதை உறுதிப்படுத்துவதற்கான நல்ல யோசனையை நாம் முன்வைக்க வேண்டும் என அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

இதேவேளை இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜ.எஸ்.பி பிளஸ் வரிச் சலுகை விரைவில் கிடைத்துவிடும் என்று இலங்கை ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சர் உட்பட அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் பலர் நம்பிக்கை வெளியிட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இலங்கைக்கு...

திட்டங்களாகும். ஒன்று கொடைத் திட்டமாகும்.

கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்துக்காக ஜப்பான் 12.957 பில்லியன் யென்னை கடனாக வழங்கவுள்ளது. களுகங்கை நீர் விநியோக விரிவாக்கத் திட்டத்துக்கு 31.81 பில்லியன் யென் கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

மேலும் பொருளாதார சமூக அபிவிருத்தித் திட்டத்துக்கு 1 பில்லியன் யென் கொடையாக வழங்கப்படவுள்ளது.

இதில், கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டத்துக்காக வழங்கப்படும் நிதி உதவி, வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களில், உள்ளூர் வீதிகள், சிறிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறியளவிலான நீர் விநியோகத் திட்டங்கள், மேற்படி மாகாணங்களின் வாழ்வாதார மற்றும் உற்பத்தியுடன் நேரடித் தொடர்புடைய திட்டங்களுக்காக பயன்படுத்தப்படும்.

பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்காக வழங்கப்படும் 1பில்லியன் யென் நிதி, திருகோணமலைத் துறைமுகத்தின் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படும்.

ஜப்பான் வழங்கியுள்ள கடன்கள் இரண்டுக்கும் ஆண்டுக்கு 1.4 வீதப்படி வட்டியை செலுத்த வேண்டும் என்பதுடன், 25 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ரூ.9 இலட்சம்...

சாதாரண தொகை அல்ல. இதனை நாட்டு மக்கள் அனைவரும் இணைந்து செலுத்துவதற்கு முயல வேண்டும்.

இவ்வாறான நிலை ஏற்படக்காரணம் தேவையற்ற செலவுகளே. கடந்த காலத்தினால் ஏற்பட்ட திருட்டு கொள்ளைகள் மூலமாகவே இத்தகைய பாரிய தொகையினை இலங்கை தொலைத்துள்ளது.

அதேபோன்று, எயார் லங்காவினால் ஏற்பட்ட நட்டத்தினால் நாட்டின் ஒரு நபர் 36 ஆயிரம் ரூபாய் வரை கடனாளியாக மாறிவிட்டனர்.

அதனால் நாட்டில் திருடர்களை இல்லாமல் செய்ய அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். யார் தவறு செய்தாலும் முறைப்பாடு செய்ய வேண்டும்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவு மற்றும் நாட்டின் நீதி முறையாக செயற்படுகின்றது. எதிர் காலத்தில் ஒரு நல்ல நாடாக இலங்கை மாறும என ரஞ்சன் ராமநாயக்க அந்த காணொலியில் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

O/L உடன் மாதம்
25,000/- சம்பாதிக்க!
நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு பயிற்சியுடன் வேலைவாய்ப்பை வழங்கி வெற்றிநடை போடும்
Diploma in Tourism & Hotel Management 7ம் அணி
3 மாத இலவச ஆங்கில வகுப்புடன்
புதிய பிரிவு ஆரம்பம் ஏப்ரல் 19 புதன் காலை 10மணி
பயிற்சிக் காலத்திலேயே பணம் சம்பாதிக்கலாம்
யாழ் - கொழும்பு முன்னனி ஹொட்டேல்களில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
(C-8102)
175,முதலாம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி),யாழ்ப்பாணம்.


## கிணற்றில் வீழ்ந்து...

கிணற்றில் தண்ணீர் அள்ள முற்பட்ட போது இவர் தவறி கிணற்றில் வீழ்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-89)


பிரத்தியேக வகுப்புக்கள்
வர்த்தகப் பிரிவு
A/L 2019
புதிய பிரிவு ஆரம்பம்
15.04.2017
சனிக்கிழமை காலை 9.30
பொருளியல் : S. ஜெயக்குமார்
வணிகக்கல்வி: : V.K. ரவீகரன்
கணக்கீடு : A.T. சுரேன்
இடம்: 356/5, 1ம் ஒழுங்கை, இருபாலை வீதி - கோண்டாவில். (ஐயப்பன் கோவில் அருகாமை)
தொடர்புகளுக்கு: 0777 238597
(8711)


## வாகன தகர்ப்பு...

வாகன தகர்ப்பு வெடிபொருள் ஒன்று நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளது.

புது வருடத்தை முன்னிட்டு வவுனியா உக்கிளாங்குளம் 04-ம் ஒழுங்கையில் உள்ள வீடு மற்றும் வீட்டின் வளவினை துப்புரவு செய்த போது மண்ணில் புதையுண்ட நிலையில் குறித்த 15 கிலோ நிறையுள்ள வெடிபொருள் காணப்பட்டுள்ளது.

இதனை அடுத்து வீட்டின் உரிமையாளர் பண்டாரிக்குளம் பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பண்டாரிக்குளம் பொலிஸார் மற்றும் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் வெடிபொருளை பார்வையிட்டதுடன், இது தொடர்பான விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

நீதிமன்ற அனுமதியினை பெற்று விசேட அதிரடி படையினரின் உதவியுடன் வெடிபொருளை செயலிழக்க செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த வெடிபொருளில்கட்டன் பவான் (ஐயா) தகர்ப்பு வெடிமருந்தென பொறிக்கப்பட்டுள்ளதுடன், இது தமிழீழ விடுதலைப் புலிகளால் யுத்த காலத்தில் புதைக்கப்பட்டு இருக்கலாம் என் சந்தேகிக்கப்படுகின்றது. (செ-15-250)

## எண்ணெய் குதங்...

கருத்து வெளியிட்ட அவர்,

சீனக்குடாவில் உள்ள மொத்தம் 99 எண்ணெய்க் குதங்களில், குறைந்தது 73 எண்ணெய்க் குதங்கள் இந்தக் கூட்டு முயற்சித் திட்டத்தின் கீழ் இயக்கப்படவுள்ளன.

ஏனைய 10 எண்ணெய்க் குதங்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பயன்படுத்திக் கொள்ளவுள்ளது.

எஞ்சிய 14 எண்ணெய்க் குதங்களும் இந்தியாவுக்கு நீண்டகால குத்தகைக்கு வழங்குவற்கான பேச்சுக்கள் தற்போது நடந்து வருகின்றன.

2003ஆம் ஆண்டில் இந்த எண்ணெய்க் குதங்கள் மீது இந்தியா ஆர்வம் காட்டியிருந்தது. அப்போது ஒரு உடன்பாட்டின் மூலம் 99 எண்ணெய்க் குதங்களும் இந்தியன் எண்ணெய் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது என்றும் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். (செ-11)


ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
தொலைபேசியில் இன்றே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்



விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



FALC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
இலகுவாக எழுத, வாசிக்க, சரியான உச்சரிப்புடன் கதைக்க...
2006 முதல் இன்றுவரை 1246 மாணவர்கள்
இல. 40, பலாலி வீதி, (ஆரியகுளம்) 15.04.2017 சனி 10am 0779 789 456 021 221 7781
No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி 17.04.2017 பி.ப. 4.00 021 320 2973
IELTS Life Skills A1, B1 வகுப்புக்களும்.....
(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)



வாழக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
அண்ணா பொதிகள் சேவை
இல.976. கே.கே.எஸ் றோட். நாச்சிமார் கோவிலடி. யாழ்ப்பாணம்
தொ.பே:021 221 5656 070 330 5500
AnnA
வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
AnnA And Co
No.976, K.K.S Road, Nachimar Kovilady Jaffna 021 221 5656 070 330 5500
Happy Tamil New Year - 2017
(C-8105)






(C-8103)
● தேர்ச்சி மிக்க வடிவமைப்பு
● உயர்தர பிறிண்டிங் சேவை
● சிறந்த வாடிக்கையாளர் சேவை
ideas PRINTERS
936A, K.K.S Road, Jaffna. (near the naachimar kovil) 021 222 7788



இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
Getting Ready to
Marriage..
we make colourful





Wedding | Puberty Ceremony | Birthday | Pre-Shoots
Documentaries | Sports & Events | Streaming & Indoor Studio
4K Full HD 1080 Blu-ray Disc DVD
(C-8103)
THE VIDEO Blossoms
unforgettable memories
Hotline 0772 840 496
No.1011 K.K.S Road, Vannarpannai, Jaffna.
thevideoblossomspage thevideoblossoms@gmail.com 021 221 5544


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.